திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

ஜோதி : 8 4-2-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணு மலர் : 26

பெங்களூரில் மாநாடுகள்

ஒத்திவைக்கப்பட்டிருந்த கர்நாடகப் பகுதி தி. மு. கழக முதல் சமூகசீர்திருத்த, அரசியல் மாநாடுகள் பெங்களூரில்

பிப்ரவரி 12, 13.

சனி, ஞாயிறுகளில்

நடைபெறும் என வரவேற்புக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

குன்றக்குடி மட தம்பிரானின்

கோயபல்ஸ் பிரசாரத்திற்கு வேட்டு

"தமிழ் நாட்டிலே கடந்த பல நூற்றாண்டு களாக புத்த நெறிக்கு ஆதரவு இருந்ததில்லை. வைதீக இந்து மதத்தின் மீதுதான் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். ஏனெனில் இந்து மதம் தான் தாய மதமாகும்"

என்பதாக குன்றக்குடி மடதம்பிரான்களில் முதல்வரும், **குன்றக்குடி சாமியார்** என்று அழைக்கப்பட்டு வருபவருமான அருணசல தேசிகர் பேசியிருப்பதாக தினமணி 28-12-54-ம் நாள் வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த குன்றக்குடி மட பெரிய தம்பிரான் கோயபல்ஸ் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தும் வகையில் ரங்கூனிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில இதழ் (Burma Star) 21-1-55 வெளியீட்டில் தோழர் வி. எ. ரங்கசாமி அவர்கள், "இந்தியாவில் பவுத்தநெறி எதிர்ப்புக் காரியங்கள்" என்ற தலைப்பில் வரைந்துள்ள ஆங்கிலக் கட்டுரையின் கருத்தை வாசகர்களுக்கு அளிக்கிறோம்.

*

இந்தியா மகாபோதி சங்கப் பொதுச் செயலாளர் திரு. தேவப்பிரிய வரலிசிங்கா "இந்தியாவில் புத்தநெறி 'மறுமலர்ச்சி' என்று தலைப்பிட்டு எழுதிய கட்டுரை கடந்த வாரத்தில் உள்ளூர் ஆங்கில தினத் தாள்களிலே வெளியாயிற்று.

வர்ணசிரம தர்மத்தினரால் சமுதாய சமய சுதந்திரங்கள் பறிக்கப்பட்டவர்களும் சாதியொதுக்கம் செய்யப்பட்டவர்களுமான பழங்குடிகளுக்கு இந்தக் கட்டுரை நல்லூக்கம் தருவதாகும்.

மனித இனம் இப்போது அமைதியும் மகிழ்வுமடைய வேண்டுமானல் புத்தநெறி ஒன்றுதான் சிறந்த மார்க்கம் என்ற உண்மையை இன்று உலகமே ஒப்புக் கொள்கிறது!

இந்திய சர்க்கார் முன்னைய சட்ட அமைச்சரான அறிஞர் அம்பேத்கார் அவர்களும் தென்னிந்திய திராவிட இயக்கத்தின் தலைவரான பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களும், அவரைப்போன்ற பேரறிஞர்களும் புத்தநெறி மறுமலர்ச்சியின் அவசியத்தை திண்ணமாக உணர்ந்து தங்கள் இயக்கத்தினருக்கும், பிறருக்கும் புத்தநெறி ஒன்றையே தங்களுடைய வாழ்க்கை நெறியாகக் கொள்ளுமாறு மக்களிடையே பிரச்சாரம் செய்யுமாறு கூறிவருகின்றனர்.

இந்த புத்தநெறி எல்லா மக்களுக்கும் சமத்துவமளிப்பதுடன் தனிப்பட்ட எந்த மனிதரின் மதிப்பையும் குறைக்காதது என்று திராவிடப் பெருந்தலைவர் வற்புறுத்திக் கூறி வருகிறார்.

தென்னிந்தியாவில், ஈரோடு நகரில், கடந்த ஜனவரியிலே பெரியாரவர்கள் முயற்சியால் நடத்தப்பட்டதும்; இலங்கைப் பல்கலைக் கழக புத்தக் கலை இயல் பேராசிரியர் டாக்டர் ஜி. பி. மல்லசேகரா அவர்கள் தலைமை வகித்ததுமான புத்த மாநாட்டிலே புத்தநெறிப் பிரசாரத்தை தென்னிந்தியாவிலே தீவிரமாக நடத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் தமிழ் தினத்தாளான விடுதலையும் இந்த புத்தநெறிப் பிரசாரத்தை செய்து வருகிறது.

நம்பகமான இடத்துச் செய்தியிலிருந்து தென்னாட்டிலுள்ள திராவிட இயக்கத்தில் 2 லட்சம் சந்தா அங்கத்தினர்கள் இருப்பதாகவும் சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தபடி வலிமை மிக்கது திராவிட இயக்கங்கள் (தி. க.—தி. மு. க.)தான் என்றும் தெரியவருகிறது.

புத்தநெறியை அதன் பிறப்பிடமான இந்தியாவிலே, மறுமலர்ச்சி யடையச்செய்ய அறிவாளர்கள் மேற்கொண்ட இம்முயற்சிகளை தென்னிந்தியாவிலுள்ள வைதீக இந்துக்கள் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. இதற்கு ஆதாரமும் தருகிறேன்.

தென்னிந்தியா குன்றக்குடி மடாதிபதியான தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாச்சாரியசாமி என்பவர் பேசியதாக சென்னை தினசரி பத்திரிகையான தினமணி 28-12-54 இதழில் வெளியிட்டுள்ளதை மேலே குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்த சாமியார் இப்போது மலேயா நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறாராம். அடுத்த மாதம் பர்மாவுக்கு வருவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவிலே வர்ணசிரம தர்மக் கங்காணிகள் மூலம் புத்த அறநெறியை நாசமாக்க எவ்விதம் தங்களுடைய பழைய தந்திரத்தை மீண்டும் கைக்கொண்டுள்ளனர் என்பதை இந்த சாமியாரின் அறிக்கையே தெளிவாகக் காட்டுகிறது. "தென்னிந்தியாவிலே இனிமேல், வர்ணசிரம தர்மத்தால் எந்த மக்களையும் சுரண்ட முடியாது. ஏனென்றால் விஞ்ஞானக் கலையும், நவீன முறைகளும் மக்கள் வாழ்க்கையில் புரட்சிகரமான முன்னேற்ற மாற்றத்தையும் ஏற்படுத்தி, மனித இனத்தவர்களின் நல்வாழ்க்கை முன்னேற்றத்துக்கான வழிகளையும் கதவுகளையும் திறந்து விட்டன என்பதாக

14-ம் பக்கம்

'ஆவடி' சாதித்த அற்புதம் பாரீர்!

"ஆவடி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சோஷலிசம் போன்ற பொருளாதாரம்" என்ற தீர்மானத்தை முதலாளித்துவ முகர்முக்கு நேரு பண்டிதர் விளக்குகிறார்.

தேனாறு

சிந்தனை

சூழ்ந்து நிற்கும் இருளைச் சுழன் றோடச் செய்யும் சக்தி வாய்ந்த சுடர் விளக்குத்தான் அது. ஒளிப் பிழம்பாக ஒளிர உதவும் திரி எண்ணெயும் அதில் இருக்கலாம்; எனினும் அதனை ஏற்ற வும், தூண்டிவிடவும் ஒருவர் இருந்தால்தானே அந்த விளக்கு இருள் விலக்கும் அருள் விளக்காகப் பிரகாசிக்க முடியும்!

அதைப்போலத்தான் அவனும்! இளமையிலே பள்ளிப் பருவத்திலே கவிதை என்றால் அவனுக்கு என்னவென்றே தெரியாது. அதன் அணுவைக்கூட ரசித்ததில்லை. ரசித்து அனுபவிக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை.

ஆனால் பள்ளியைவிட்டு வெளியே வந்ததும், பண்புள்ள நண்பன் ஒருவனின் அன்பான கருணைத் தூண்டுகோல் கிடைத்ததும் அவனை கவிதைக் கதவுகள் திறந்தன. அணையுடைந்த வெள்ளமென அவன் உள்ளத்திலே யிருந்து கவிதைகள் பீறிட்டன. குமுறிய எரிமலையாகக் கவிதைக் குழம்பை அள்ளி அள்ளி வீசின.

ஏன்! ஆரம்பத்தில் கவிதையின் அடிச் சுவட்டைக்கூட அறியாத அவனைக் 'கவிஞரின் கவிஞன்' 'உலக மகா கவிஞன்' என்ற பெரும் புகழ்கூட அணைத்துக் கொண்டது.

ஆம், இந்த விசித்திர வாழ்க்கையின் மையமாக விளையாடியவன்தான், பிற

ஐந்தாண்டுகள் தான் கவிதை இயற்றினன் ஆனல் அத்தனையும் தேனாறு!

காலத்திலே 'மகாகவி' என்று புகழப் பட்டு—அதுவும் இருபத்தாறே வயது வாழ்ந்து, இணையில்லாத ஆங்கிலக் கவிஞனாக அரசோச்சின ஜான் கீட்ஸ் (John Keats)! சுவையான ஆனல் சோகம் நிரம்பிய அவன் வரலாறு மற்ற கவிஞர்களின் வாழ்க்கையிலே யிருந்து மிகவும் மாறுபட்டது!

இலண்டனுக் கருகில் 1795-ம் ஆண்டு அக்டோபர் 29-ம் தேதியன்று பிறந்தவன் ஜான்கீட்ஸ். கீட்ஸின் உடன் பிறந்தோர் இரண்டு சோதரர்களும் ஒரு சோதரியுமாவர்.

இளமையிலேயே கீட்ஸ் மிகவும் அழகு படைத்தவனாக இருந்தான். அத்துடன் இடையறாத குறும்பும் அவனுடன் பிறந்ததாக இருந்தது. பள்ளியிலே அவன் செய்த திருவிளையாடல்கள் பலப்பல. உடன்படிக்கும் மாணவர்களைப் பரிகசிப்பதும், வீண்வம்புச் சண்டைக்கிழுத்து உதைப்பதும்தான் அவனுக்குப் பொழுது போக்கு.

ஆனல் அந்த வாழ்க்கையை அதிக நாள் நீடிக்க விடாமல் அடியோடு மாற்றிவிடக் காரணமாயின இரண்டு நிகழ்ச்சிகள்: ஒன்று, அவனது ஒன்பதாவது வயதில் அவன் தாய் மறைந்தாள். எனவே தந்தையின் கண்டிப்பால் தன் சேட்டைகளைச் சுருட்டிக் கொண்டு தான் உண்டு, தன் வேலையுண்டு என்ற நிலையிலே நாட்களைக் கடத்த வேண்டியவனுன்.

அடுத்த ஆருவது ஆண்டில், அதுவும் புரண்டது. அவன் தந்தையும் தாயின் வழியைப் பின்பற்றியதால். ஆம், பதினைந்து வயதிற்குள்ளேயே பெற்றோர் இருவரையும் இழந்துவிட்டுப் பெருந் துன்பத்திற்குள்ளானன் கீட்ஸ்.

எனவே பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு 1811-ம் ஆண்டு 'சர்ஜன் ஹாமண்டு' என்பவரிடம் இரணசிகிச்சை கற்றுக் கொள்ள அமர்ந்தான். எவ்வளவோ துன்பங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டு, இரண சிகிச்சையை நல்ல முறையிலே கற்றுக் கொண்டான் என்றாலும் அவனுக்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை—அங்கிருந்து வெளியேறியதும் அந்தத் தொழிலைத் தொடரவுமில்லை.

இந்நிலையில் அவன் உயிர்த்தோழன்—இளமை முதல் இணைந்த நண்பன் 'கிளார்க்' தூவிவிட்டிருந்த கவிதை விதைகள் முளைத்து வெகு வேகமாக வளரத் துவங்கின. பள்ளியிலே பயிலும் போதெல்லாம் பாக்களின் வாசனையையே அறியாத அவனுக்குக் கிளார்க் தான் அதை உணர்த்தினன். பெரும் பெரும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் எழுதிய புத்தகங்களை யெல்லாம் அவனுக்குக் கொடுத்துப் படிக்கச் செய்தான் கவிதையின் இலக்கணத்தையும் கற்றறியச் செய்து அவனையும் கவிதை இயற்றும்படி தூண்டினன்.

ஆம், அஜீரணத்தால் மந்தமாய்க் கிடந்த கீட்ஸின் உள்ளத்திற்குத்தகுந்த சிகிச்சைகள் செய்து பெரும் கவிதைப் பசியை உண்டாக்கி விட்டான் கிளார்க்.

ஹோமர், ஷேக்ஸ்பியர் போன்றவர்களின் புகழ் வாய்ந்த காவியங்களைப் பன்முறை படித்து மகிழ்ந்த கீட்சின் உள்ளத்தின் மீது கவிதைச் சம்மட்டி மோத, மோத அதனை மூடியிருந்த உறையும் பிளக்க ஆரம்பித்தது அந்தப் பிளவின் அடியிலே இத்தனை நாள் மறைந்துகிடந்த வைரக்கவிதைப் புதையலும் வெளிப்பட்டது.

அந்தப் புதையலைத் தக்க சமயத்திலே வெளி உலகிற்கு அறிமுகப்படுத்த, தகுந்த விலையாக்கி, அவன் கவிதா உள்ளத்தை வற்ருத சுனையாக மாற்ற உதவினன் 'லேஹண்ட்' என்ற கவிஞன், கீட்ஸின் நண்பன்.

அந்நாளில் பெரிய மனிதர்களுள் ஒருவனாக இருந்த ஹண்ட், வெறும் கவிஞனாக மட்டும் வாழவில்லை. பெரும் ஆராய்ச்சியாளனாகவும், தீவிர அரசியல் வாதியாகவும் திகழ்ந்தான். அத்துடன் பத்திரிகை ஒன்றின் ஆசிரியனாகவும் இருந்தான். கொற்றவனாயினும் குற்றம் குற்றமே என்று கருதிய ஹண்ட் ஒரு முறை அரசனையே கண்டித்து எழுதி விட்டான், அதனால் சிறைவாசத்தை அனுபவிக்க நேர்ந்தபோது கூட அவன் கலங்கவில்லை.

எத்துணை இடையூறுகள் துன்பங்கள் நேர்ந்திடினும் உண்மையான இலட்சியமும், உறுதியான உள்ளமும் இருக்க வேண்டுமென்று மற்றவர்களுக்குச் சொல்லும் அவனுக்கு அந்த உறுதியில்லாமலா போய்விடும்!

அந்த வைர உள்ளத்தினனின் உறவு கிடைத்ததினல் தான கீட்ஸ். பெரும் கவிஞனாக முடிந்தது—அவன் கவிதைகளையும் நாடு அறிய முடிந்தது. ஏன்? கீட்ஸை முதன் முதலில் வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தியவனே ஹண்ட் தான்!

கீட்ஸின் அழகு தோய்ந்த, பொருள் பொதிந்த கவிதைகளைப் படித்து மகிழ்ந்த ஹண்ட் அவனை உளமாரப் பாராட்டினன். மேலும், மேலும் கவிதைகளை இயற்றுமாறு தூண்டினன். பெருமையுடன் அவைகளை உலகுக்கும் அறிமுகப் படுத்தினன். அவன் வற்புறுத்தலின் பேரில்தான் அவனது எண்ணத்தையும், உதவியையும், பெற்று, கீட்ஸ் தனது முதல் கவிதைத் தொகுதியையே வெளியிட்டான்.

நண்பர்களின் விளக்கமும் உதவியும் வேண்டியமட்டும் கிடைக்கவே கீட்ஸ் கார்காலத்துக் கருமேகமாக மாறினன். இலக்கியச் சோலையின்மீது இனிய மழையையும் பொழிந்து தள்ளினன். இயற்கையின் எழில் குவித்து நிற்கும் எண்ணற்ற இன்பக் காட்சிகளையெல்லாம் இழுத்து வந்தான். அவற்றை கவிதை என்ற கோப்பையிலே ஊற்றிக் கற்பனை என்ற சுவையையும் சேர்த்து வேண்டியவர்க் கெல்லாம் வாரி வாரி வழங்கினன்.

கருத்தாழமும், சொல்லாழமும் நிறைந்த அவன் உயிர்க் கவிதைகள் நாடெங்கும் பவனி வரத் துவங்கின. இலக்கிய ஏடுகளில் எல்லாம் அவன் கவிதைகள் பீடுநடைபோட்டன. படித்தவர்களின் உள்ளங்களில் எல்லாம் பதம் பிடித்து நர்த்தனமிட்டு மகிழ்வித்தன. இந்த நேரத்தில் கீட்ஸின் உள்ளத்திலே கவிதைப் பசியோடு காதற் பசியும் சேர்ந்து குமுறியது. பானி பிரெளனி (Fanny Brawny) என்ற கட்டழகியைக் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்தான். அந்த அழகோவியத்தைத் தன் உயிரோவியமாக ஆக்கிக் கொண்டு உல்லாச வாழ்வு நடத்த வெண்டுமெனவும் விரும்பினன்.

பிரெளனி சாதாரண அழகியல்ல, சுழலும் விழிகளும், துவளும் இடையும் கொண்ட சுந்தரவதனி — ஆடலழகி! எழிலின் சாயலான அந்த இன்பவல்லியும் கீட்ஸை நேசித்தாள். கட்டழகன் கீட்சின் மீது அன்புத் தென்றலை அலை அலையாக மோதவிட்டாள்.

அந்தத் தென்றலின் இனிமையிலே உலகத்தையே மறந்தான் கீட்ஸ் இதயத்தை காதலியிடம் ஒப்படைத்து விட்டு எந்நேரமும் அவள் நினைவிலேயே உழன்றான். அவளைத் தன் வாழக்கைத் துணைவியாக்கிக் கொண்டால்தான் தனக்கு வாழ்வுண்டு இன்பம் கிடைக்கும், உல்லாசத்தை அனுபவிக்க முடி

பள்ளியிலே கவிதையின் வாசனையே அறியான் : ஆனல் பார்புகழும் மகா கவிஞனாக மாறினன்!

யும் என்ற அளவிட்குக் கூட அவன் உள்ளம் சென்றுவிட்டது.

ஆனல் பிரெளனியோ கீட்ஸை நேசித்தது அவன் இல்லக் கிழத்தியாக வேண்டுமென்ற ஆசையில் அல்ல, அவனோடு இன்பம் துய்க்க வேண்டும் என்ற இச்சையில்! அவள் அவனை உண்மையாகவே காதலித்தாள்—ஆனல் அவனைப் போல அவ்வளவு பித்தம் பிடித்தல்ல, பத்தோடு பதினென்று என்கிருர்களே அதைப்போல!

ஆம், பிரெளனியின் அன்பு கீட்சிற்கு பத்தோடு பதினென்ருக பகிர்ந்து கொடுக்கும் அளவில்தான் இருந்தது. அவ்வளவுதான் அவளால் முடியும். அவள் உள்ளத்திலே அவனுக்கு அந்த அளவுதான் இடம் கிடைத்தது.

காரணம், ஆடலரசியான அவள் எத்தனையோ இளைஞர்களின் உள்ளத்திலே மட்டுமின்றி உடலோடும் ஆடி மகிழ விரும்பும் மனேபாவம் கொண்டவளாக இருந்தாள். விதவிதமான வாலிபர்களின் மத்தியிலே வாழ்க்கை முழுவதும் வேடிக்கையாக ஆடிப்பாடி ஆனந்தம் காண விழையும் அவள் மனம் கீட்ஸுடன் மட்டும் வாழ்க்கை நடத்த எப்படி ஒப்பும்!

அதற்காக அவள் அவனையே வெறுத்துவிட்டாள் என்பதல்ல பொருள். தன் காதலர்களின் வரிசையிலே அவனையும் சேர்த்துக் கொள்ளத்தான் விரும்பினள். அவனுக்கும் இன்பம் தந்து மகிழ்விக்கவும் இசைந்தாள்.

ஆனல் கீட்சின் உள்ளம் அதை எப்படி ஏற்றுக் கொள்ளும். கண்டவர்களோடு களித்துத் திரியும் அவளைக் காலமெல்லாம் கொஞ்சிக்குலவ அவன் இளம் மனதுதான் இடம்தருமா? எனவே அவன் காதல் பெரும் ஏமாற்றத்தைத்தான் பரிசாகக் கொடுத்தது. அழகி பானி பிரெளனியோடு கை கோர்த்துக் கொண்டு ஆனந்தமாக வாழ்க்கைச் சோலையிலே பவனிவரலாம், இணையில்லாத இன்பத்தை அடையலாம், இல்லறத்தை அமைத்து என்றும் அழியாத மகிழ்ச்சியிலே திளைக்கலாம் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்த கீட்ஸ் பிரெளனியின் உண்மை உருவத்தைக் கண்டு இடிந்துபோனன்.

கனவுலகிலே களிப்பைக் கண்டு மகிழ்ந்த அவன் நினைவுலகிலே நீங்காத துன்பத்தைத்தான் தழுவிக் கொள்ள முடிந்தது, மகிழ்ச்சியை எதிர்பார்த்த அவன் மனம் வேதனைத் தீயிலே வெந்து கருகத்தான் முடிந்தது.

எனவே கீட்ஸ், தன் மணல் மாளிகைகளைக் கவிதைக் கோபுரங்களாக்கி ஓரளவு அமைதியைக் கண்டான். ஆடித்திரிந்த கனவுக் காட்சிகளை எல்லாம் கவிதை நினைவுகளாக்கி ஓடவிட்டு அவன் உள்ளத்தை சாந்தி செய்தான். அழகியின் மடியிலே புரண்டு அணைப்பிலே தவழ்ந்து, முத்தத்திலே மகிழ்ந்து இன்பத்திலே உலவி ஏகபோக வாழ்வு நடத்த எண்ணியிருந்த கீட்ஸ் அவைகளைக் கவிதைகளிலே ஏற்றிக் களிப்பதிலேதான் இன்பத்தைக் காணமுடிந்தது.

இடிமேல் இடிஎன்கிருர்களே அதைப்போல, இத்தனையும் போதாதென்று அவனைக் கடும் க்ஷயம் வேறு பற்றிக் கொண்டது. வாலிபத்தின் வனப்பிலே வேங்கையாக வாழ வேண்டிய கீட்ஸை வேதனைமேல் வேதனையாகச் சூழ்ந்து வாட்டி வதைக்கத் துவங்கியது.

அதுவும் கடுமையின் உச்சத்தை அடைந்தபோது, டாக்டரின் யோசனைப்படி அமைதியை நாடி நண்பன் செவேர்னுடன் 1820-ல் இத்தாலியின் நேபிள்ஸ் நகருக்குப் பயணமானன். அங்கும் அவனல் அமைதியாக வாழ முடியவில்லை. காசத்தின் கொடிய கிருமிகள் அவனை அணு அணுவாகத் தின்று கொண்டிருக்கும்போது எப்படி அமைதி கிடைக்கும்?

இருபத்தாறு வயதிலேயே எந்தக் கவிஞனும் பெற முடியாத புகழை அடைந்து, இணையில்லாத கவிஞனாகத் திகழ்ந்த அந்த மாபெரும் கவிஞனை 1821 பிப்ரவரி 23-ம் தேதியன்று ரோம் நகரில் மரணம் தன் இருகைகளாலும் இருகத் தழுவிக் கொண்டது. இல்லை, அமைதியைநாடி அல்லற்பட்டுக் கொண்டிருந்த அவன் உடம்பை அமைதியினிடத்திலே வீசிஎறிந்துவிட்டு, வேதனையோடு பிரிந்தது உயிர்!

ஆம், கவிதைச் சுனையின் உருவாக— தேனாருக மாறியிருந்த கீட்ஸை அதிக நாள் விட்டு வைத்தால் அரைகுறைக் கவிஞர்களுக்கு ஆபத்தென்ற வஞ்சக நினைப்பினல்தானே என்னவோ காசம் அந்த இளம் கவிஞனை அரித்தே விட்டது.

ஆனல், அவன் உள்ளத்திலே வீறிட்ட

13-ம் பக்கம்

சுமைதாங்கி

மா. தங்கவேலர்

முன்கதை—கண்ணன் கோஷ்டியினருக்கு நீதிபதி ஆறுமாத சிறைத் தண்டனை அளித்தார். இத்தீர்ப்பைக் கேட்டதும் கண்ணன் கோஷ்டியில் முகத்திலே பிரேதக்களை தட்டியது. நீதிமன்றத்திற்கு வந்திருந்த நர்மதாவின் மீது தனது கோபப் பார்வையை வீசிக்கொண்டே போலீஸ் பாராவில் சென்றான் கண்ணனும் அவனது சீடர்களும்!

22

மஞ்சள் அழகியின் மேனி போல காட்சி தந்தது வானம். காய்ந்த கதிரவன் ஓய்ந்து சாய்ந்து நின்றான் மேற்கு மூலையில். தான் நடந்துவந்த பாதையை திரும்பிப் பார்ப்பதிலே அவனுக்கொரு திருப்தி. கதிரவனின் 'அக்ரம' ஆட்சி அஸ்தமித்து விட்டதைக் கண்டு தாரகைகள் சுதந்திரப் பள்ளுப் பாடின. வாழ்த்தொலி பூமியைக் கூடத் தொட்டுத் திரும்பிக் கொண்டிருந்தன. அக்ரம ஆட்சி ஒழிந்து உதயமான அமைதிபுரி ஆட்சியின் மேக பீடத்திலே தங்கமுடி தாங்கி சிங்க நடைபோட்டாள் முழுமதியாள். கதிரவன் எப்போது வெளியேறுவான்...அவன் காலிசெய்த இடத்திலே தங்களின் 'தர்பார்' சக்கரத்தை எப்போது உருட்டலாமென காத்திருந்த அந்த இடந்தேடிகள்— ஆமாம்...தாரகைகள் ...நிலவுப் பெண்ணின் உறவு முறையினர்...உள்ளத்து மகிழ்ச்சியை விழி ஒளியிலே காட்டிக் கொண்டே வான வீதி முழுவதுமே அவர்களாகவே காட்சி தந்தனர். தங்களின் உறவு முறையினர் எல்லோருக்கும் இடந்தேடித் தந்துவிட்டதிலே முழுமதியாளுக்கு பூரண திருப்தி. இதை அவள் வாய் திறந்து சொல்லவில்லை. அவளென்ன வாய்திறந்து பேசும் 'சாமானிய' நிலையிலாயிருக்கிறாள். அவள் அமர்ந்திருக்கும் பீடத்தின் மதிப்பென்ன? தன் தலையை தஞ்சமடைந்திருக்கும் தங்கமுடி எங்கெங்கெல்லாமோ எடுத்துச் சொல்லும் பெருமைதானென்ன?...அவளைப் பேச முடியாதவளாக்கி வைத்தது சூழ்நிலையும் சுயகௌரவமும். எனவே பூத்த புது மலர் இதழ் விரிப்பது போல பொன்னதரத்தை அசைத்துப் பூரிப்பை நெஞ்சத்தின் ஆசை நெளிவைக் காட்டினாள்.

பாடப்பட்ட சுதந்திர கீதம், ஆடப்பட்ட விடுதலை நடனம் சுவையைத் தரவில்லை. கீதமும், நடனமுந்தான்...கோகிலங்களின் குயில் குரலினாலும், குமரிகளின் மயில் நடையினாலும் சுவையாக்கப்பட்டதே தவிர...சோகச்சுமையினருக்கு வேதனையை அங்குல அளவாயினும் விரட்டியடித்திடவில்லை. அக்ரமத்தை கப்பலிலே மூட்டை முடிச்சோடு ஏற்றி அனுப்பிவிட்டு, அகிம்சை பீடமேறியது. பீடத்தைச் சுற்றி உறவு முறையினர் அமர்ந்தனர். மகாராஜாக்கள் உலகாள வந்தனர். கொட்டுந் தேளாக யிருந்துவந்த குட்டிராஜாக்களின் மொட்டைத் தலையை அலங்கரித்த கீரீடத்தின் ஜொலிப்புத்தான் மறைந்துவிட்டதா? இல்லை மனித வேட்டை தான் நின்று போய்விட்டதா? விண்ணகொடிக்க வீறுகொண்டு எழுந்த நேரத்திலே, தேசிய தப்பட்டையை உரிமை எழுப்பியவனின் கரம் ஓங்கித் தட்டியபோது ...ஏழை ராஜ்யம்...என்று வைர மொழிகளால் கோர்த்துக் காட்டப்பட்ட பொன்னாரம் எங்கே? தர்பார் காரனின் தலையிலேயிருக்கும் தங்கமுடி தவித்துத் திரியும் தரித்திரத்தின் தலையிலே ஏற்றங் கொள்ளவா மாற்றம் நடந்திருக்கிறது. மஹாராஜாக்கள்—கவர்னர்களாக, திவான்கள்—அரசியல் ஆலோசகராக 'சட்டை' மாற்றி யிருக்கிறார்கள். பாம்பு சட்டை கழட்டுமாமே... ஆனால் அதன் குணப் போக்கென்ன மாறியா விடுகிறது?

பன்னீர் தெளித்த பஞ்சணையிலே புரளும் வெண்ணீரணிந்த பண்டாரங்களின் அன்புப் பரிசாம் தங்கச்செங்கோல் யாரிடம்? ஏழை உழவனிடமா, அல்லது உழவனின் நண்பனிடமா? அவர்களும் அந்த சாந்த சொரூபிகளும் அகிம்சா ஆட்சியை ஆதரிக்கிறார்களாம். குட்டி ராஜாக்களைவிட இவர்களென்ன மட்டமானவர்களா? காஞ்சியிலும், குடந்தையிலும்......நெல்லையிலும் தில்லையிலும் பார்......பாயிரம் பாடித் திரிய வேண்டியவர்களுக்கு ஆயிரமாயிரம் ஏக்கராக்கள், பொன்னலான அணியும் வெண்பட்டாலான துணியும் கொஞ்சமா...... மலை, பெருமலை! தடித்தம்பிரான்கள் தாடியைத் தடவியபடி அடிதொழுது நிற்கும் பக்தைகளைப் பார்க்க, பக்தைகள் கும்பிட்டுக் குனிந்து எழும் 'குளோசப்' காட்சியை சந்நிதிகளின் கழுகுக் கண்கள் படமெடுக்க, தம்பிரானின் தவித்த நிலைகண்டு சிடகோடி தன் குரு காமகோடியாகி விட்டதைக் கண்டு சிரித்து நிற்க... இதை யெல்லாம் பார்த்த பக்தை பரமனே உன் திருஉள்ளம் எதுவோ என்று விழிக்க...ஆட்சியை நாளும் நாளும் நடத்தும் ஆதீனம் வளர்ந்து கொண்டேதானிருக்கிறது சீமான் வீட்டு நாய்க்குட்டியைப்போல! சரிகைத் தலைப்பாக்களோடு சேர்ந்து இந்த சந்தனம் பூசும் சந்நிதானங்களும் கைலாகு போடத்தான் செய்கின்றனர்,

அன்று சொன்னவர் இன்று சாகவில்லை. 'ஏழை ராஜ்யம்' சிதம்பர ரகசியமாகி யிருப்பதையும் பார்க்கத்தான் செய்கிறார்கள். அன்று தப்பட்டை தட்டி உரிமை முரசொலித்தவர்களின் கரத்திலே தான் இன்று செங்கோலிருக்கிறது. சிங்காதனத்திலே யிருப்பவர்களும் அவர்களேதான். உதயமானதா ஏழை ராஜ்யம்? கரம் தான் மாறியது......நெஞ்சிலே பாய்ச்சப்பட்ட கத்தி எடுபடவேயில்லையே......பிடிதான் அழுந்துகிறது. இது நாட்டு நடப்பு!

வான வீதியின் ஆட்சியும் இப்படித்தான் ஆகித் தீர்ந்தது. காய்ந்த கதிரவன் வெளியேறினான். நிலவுப் பெண்ணாள் தங்க முடி தாங்கி சிங்காதனத்திலே அமர வந்தாள். கதிரவன் ஆட்சி தான் கனலைக் கிளப்பி கொடுமையைத் தந்தது...இரவின் அமைதியாவது நிம்மதி தரும், எண்ணங்களின் அலையோட்டத்தை தராதென்று நம்பியிருந்தாள் வாழ்க்கைக் கொடியிலே வேதனை முள்ளின் மேலே யிருந்த அழகு ரோஜா சுந்தரி. பரிதாபத்திற்குரிய அந்தப் பைங்கிளி மொட்டை மாடியிலே தவமிருந்த கயிற்றுக் கட்டிலிலே படுத்துக் கொண்டு 'வெல்வெட்' தலையணையிலே தாமரைக் கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே நிலவைப் பார்த்தாள்...நினைவையும் அலையவிட்டாள். நிலவு நிம்மதி தருமென்று எண்ணினாள். அது இவளை ஏமாற்றியேதான் விட்டது. நிலவு ஆட்சியைவிட காய்ந்த கதிரவனின் ஆட்சி எவ்வளவோ நல்லதாகப்பட்டது பூங்கொடி சுந்தரிக்கு. காதலன் குமரனை நினைத்தாள். கூடவே ஒடிக்கப்பட்ட தன்வாழ்வுச் சிறகையும் நினைத்துப் பார்த்தாள். வைராக்கியம் ஒன்றுமட்டும் மனிதனை வாழவைத்து விடுவதில்லை. உணர்ச்சிப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றபோது சூழ்நிலைகள் எப்படி யெப்படியோ மாறுகிறது. வைராக்கியம் பலமான உணர்ச்சி சம்மட்டியால் அடிபட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். நர்மதாவும் பெண் தான்...அவள் மட்டும் எப்படி உணர்ச்சிப் போராட்டங்களை— இயற்கையின் படையெடுப்பை சகித்துக் கொண்டாள். ஆண்களோடு நெருங்கிப் பழகுவதால்; பல வேடக்கார ஆண்களைப்பற்றி அவள் அதிகமாக புரிந்து கொண்டதால் உணர்ச்சியின் தாக்குதலுக்கு அசந்துபோகாத ஒரு நிலைக்குப் பக்குவமாகிவிட்டாளாவென்று...நர்மதா பற்றிய நினைவிலே எண்ணத்தை ஒட்டி வேதனையை மறக்க முயன்றாள் சுந்தரி!

மேல்மாடியிலே சுந்தரி...நர்மதாவின் வாழ்க்கை ரகசியத்தை தேடித்தேடி ஓடிக்கொண்டிருந்த போது கீழ் அறையிலே மின்சார விளக்கைப் போட்டுக் கொண்டு மனக்குழப்பத்தை அடக்க புத்தகமெடுத்து படிக்கத் துவங்கினாள். காண்டேகரின் 'வெறும் கோயில்' நர்மதாவின் கரத்திலே கொஞ்சியது. நாட்டியமாடிய விரல்கள் பக்கங்களுக்கு முத்தந் தந்தன. அந்த மராட்டிய பூபதியின் எழுத்துக்கள் அவளது கருத்தை சிறைபிடித்தன.

......"எவ்வளவு மனமோகனமான பிம்பம் அது. இவ்வளவு அழகிய உருவத்தை எங்கே வைக்கலாமென்று பக்தர்களிடையே கேள்வி பிறந்தது. பக்தனுடைய உள்ளமே என் சொர்க்கம் என்றது தெய்வச்சிலை. ஆனால் உள்ளத்திலுள்ள உருவம் கண்ணுக்குத் தென்படுவது எப்படி? எல்லாப் பக்தர்களும் ஒன்று சேர்ந்து சிலைக்காக அழகிய கோயில் அமைக்க நிச்சயம் செய்தார்கள். ஒருவர் சந்தன மரம் கொண்டு வந்தார். மற்றொருவர் அதில் சித்திர வேலை செய்தார். சொர்க்கத்திலிருந்த எழில்கள் யாவும் அந்தக் கோயிலில் வந்திறங்கின.

கோயிலிலிருந்த சிலைக்கு நாள் தோறும் பூஜை தொடங்கியது. கோயிலுக்கு அழகுதரும் அழகிய பூக்களைக் கொண்டு வருபவர் யார் என்பதைப்பற்றிப் பக்தர்களுக்குள் போட்டி உண்டாயிற்று, தூபம், தீபம், நைவேத்தியம் கோயிலை அழகாக்கும் திரவியங்கள் இவற்றைக் கொண்டு சேர்ப்பதில் ஒவ்வொரு பக்தனும் முனைந்திருந்தான். உற்சவ நாள் வந்தது. கோயில் முழுவதும் பூக்களால் நிரம்பியது. தூபம் கண்ணுக்குத் தெரியாத வாசனைப்பூக்களை மலர்வித்தது. விளக்குகள் தாரகைகளோடு போட்டி யிட்டன. பக்தர்களின் கூட்டம் பூஜையை முடித்துக் கொண்டு அளவற்ற திருப்தியுடன் திரும்பியது. திரும்பி வரும் வழியில் ஏதோ காலில் தட்டுப்படுவதைக் கண்டு ஒவ்வொருவனும் திரும்பிப் பார்த்தான். கோவிலிலிருந்த **தெய்வச் சிலை** அது. ஆனால் ஒருவனாவது அதை அறிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு பக்தனும் அதை மிதித்துக் கொண்டே நடந்து போனான்"......

வெறும் கோயிலின் முன்னுரை இப்படி பேசி முடித்தது. அந்தப் புதுமை எழுத்தாளனின் முன்னுரை அவளது புத்தக கவனத்திற்கு முடிவுரை கூறிவைத்தது. வாழ்வுக் கனவுகளோடு எழுச்சி ஏட்டின் முன்னுரையையும் மோதவிட்டுக் கொண்டிருந்தாள். சமுதாயக் கோயில் எழுப்புவோர் தெய்வச் சிலையை காலடியில் மிதித்து நின்ற பக்தர்களின் நிலையிலே உலவுவதாகக் கற்பனை செய்து பார்த்தாள். அறமும், அன்பும் உதயமாக வேண்டிய இடத்திலே அதை உண்டாக்கவேண்டுமென்று பாடுபட்டவர்களே அறிந்தோ அறியாமலோ குழப்பத்தையும்—குதர்க்கத்தையும் பரப்புகிறார்கள் உலகம் விசித்திர கோயில்—அதில் நடமாடும்நெஞ்சத்தெளிவற்றோர் காண்டேகர் காட்டிய விபரீத பக்தர்கள்தான்.

(இன்னும் வரும்)

தமிழில் தந்தி

தமிழில் முதன் முறையாகத் தந்தச் செய்தி அனுப்பும் முறை கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. கறம்பக்குடி போஸ்ட் மாஸ்டர் தோழர் அ. சிவலிங்கம் அவர்கள் தமிழ்த் தந்தி முறையைக் கண்டு பிடித்துள்ளார். ஆங்கிலத் தந்தி முறையைப் போலவே தமிழிலும் செய்திகளை விரைவாக அனுப்பவும், வாங்கவும் இயலுமென அவர் கூறுகிறார் விபரங்களுக்கு நேரடியாக எழுதிக் கொள்ளலாம் என தோழர் எம். எத்திராஜ அறிவிக்கிறார்.

பொதுக் குழுக் கூட்டம்

●

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் பிப்ரவரி 19-20-ந்தேதி (சனி—ஞாயிறு) களில் கோவை—பேரூரில் நடைபெறும். மற்ற விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

திராவிடன்

சென்னை : 4—2—55 : வெள்ளி

சர். ராமசாமியின் எச்சரிக்கை

●

பிரிட்டிஷ் ஆட்சியின் போது நூற்றுக்கு ஐம்பது சதவிகிதம் பேச்சும், ஐம்பது சதவிகிதம் செயலுமாக அவர்களின் ஆட்சி முறையும் அதைச் சார்ந்த நடவடிக்கைகளும் இருந்துவந்தன. எனவே இந்தப் போக்கினைக் கண்டித்து ஏன் நூற்றுக்கு நூறு செயலளவிலே இருக்கக் கூடாது. வெறும் தப்பட்டை யடிப்பதே சர்க்காருக்கும் அவர்களின் பாதந் தாங்கிகளுக்கும் வேலையாகிவிட்டதே என்று தேசியத் தலைவர்கள் கண்டித்து வந்தனர்!

கடந்த எட்டு ஆண்டுகளாக அந்த தேசியத் தலைவர்களே ஆட்சி பீடத்தில் அமர்ந்து ராஜ்ய பரிபாலனமும் செய்து வருகின்றனர்! ஆனால் இவர்களின் ஆட்சியிலே மக்கள் கண்ட பலன் என்ன? செயல் முறையில் பிரிட்டிஷ் ஆட்சியைவிட எங்கள் ஆட்சி சிறப்புடையது, மக்களின் துயரை கூடுமான அளவு துடைத்திருக்கிறது என்று கூறுவதற்கு முடியுமா? வெளிப்படையாகச் சொல்லவேண்டுமானால் செயலைவிட கூப்பாடுதான் உச்ச நிலையில் எழுப்பப்பட்டு வருகிறது.

நேரு சர்க்காரின் எந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அந்த திட்டத்தின் பெருமைகளைப் பற்றி தப்பட்டையடிப்பது 60 சதவிகிதமும், செயலாற்ற முனைவது 20 சத விகிதமும், ஊழல்கள் 20 சத விகிதமுமாகத்தானே காட்சியளித்து வருகின்றன. அந்த 20 சதவிகிதம் செயல்முறை கூட வடநாட்டு ஆதிக்கத்துக்கு அஸ்திவாரம் அமைத்துக் கொடுப்பதாகவேயிருந்து வருகிறது!

இந்த லட்சணத்தில் சர்க்கார் வகுக்கும் திட்டங்கள், நோக்கங்களைப்பற்றிசர்க்காரை அலங்கரித்துவரும் மந்திரிகளே ஆளுக்கொரு வியாக்கியானம்கூறுவர். அதுவும்ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்கு முள்ள வித்தியாசங்களிருக்கும் அது மட்டுமா தங்களுக்குப் புரியாததும், தலையிடக் கூடியதல்லாததுமான பிரச்னைகளிலும் முந்திரிக் கொட்டைகள் போல தலையை நீட்டுவர்! தத்துபித்தென்று பேசி சும்மா யிருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி என்ற கதைக்கு ஆளாகி நிற்பர்.

உதாரணமாக கல்வித் துறையைப் பற்றி நாளுக்கொரு மந்திரி, ஆளுக்கொரு விதமாகப் பேசுவதும் திட்டம் வகுக்க முனைவதுமாக உள்ளனர். அந்தந்த ராஜ்யத்தின் நிலைக்கேற்ப கல்வி வகுக்கலாமென்பார் ஒரு மந்திரி! ஆரம்ப, உயர்நிலை, பல்கலைக் கழகம் என்ற ஒவ்வொரு பருவத்திற்கும் தனித்தனியாக கல்விமுறை யிருக்க வேண்டுமென்பார் மற்றொரு ராஜ்ய மந்திரி! அவனவன் குலத் தொழிலை அவனவன் செய்யும் கல்வியே நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் என்று எண்ணி அதை அவசர அவசரமாக நடைமுறைக்கு கொண்டுவந்து மூக்கறுபட்ட நமது முன்னாள் மந்திரி ஆச்சாரியார் போன்றவர்களும் கல்வித் துறையைப்பற்றி டம்மாரம் அடிப்பதில் தவறுவதில்லை. இப்போதுள்ள கல்வி முறையே வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தான் வளர்த்து வருகிறது எனவே வேலையின்மையை ஒழிக்கும் வகையில் கல்வி முறை வகுக்கப்பட வேண்டுமென்பார் அனைத்திந்திய மந்திரி! இந்தியை எல்லோரும் கட்டாயமாக படித்து விட்டால் வேலையில்லா திண்டாட்டம் பர்மாவையோ, பாக்கிஸ்தானையோ தேடி ஓடிவிடும் என்பார் மற்றுமோர் இந்தி ஆதிக்க மந்திரி! இவ்வளவையும் சேர்த்துப் பார்த்தால் குட்டையில் ஊறிய மட்டைகளைப் போலத்தான் இருக்குமே தவிர தெளிவான திட்டமோ அதை செயல்பட வைக்கும் அறிவுரைகளையோ காண இயலாது.

சொந்த புத்தியும் பூஜ்யம்; சொல் புத்தியை ஏற்பதிலும் மந்தமான போக்கு உள்ளவனின் கதைக்குத்தான் காங்கிரஸ் சர்க்காரின் கல்வித்துறை திட்டமும் அதனை அஸ்திவாரமாக வைத்து வேலையில்லாக் கொடுமையை ஒழிக்கும் கொள்கையும் இருந்து வருகிறது.

இவ்வித இரண்டும்கெட்டான் நிலையிலுள்ள சர்க்காருக்கு அறிவுறுத்தும் வகையில் அண்மையில் கௌஹாதி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவாற்றிய—திருவாங்கூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சர் எ. ராமசாமி அவர்கள் தமது சொற்பொழிவில் அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருப்பது குறிடபிடத்தக்கதாகும்.

"உடலுழைப்பு இன்றியமையாதது எனத் தெளிவாகத் தெரியவரும் பட்சத்தில், படித்த இளைஞர்கள் தயக்கமின்றி அதைச் சிறப்பிக்கத்தக்க முறையில் அந்த உழைப்புக்கு தங்களை ஒப்படைத்துக் கொள்ளத் தயாராயிருக்கின்றனர். எனவே படித்த இளைஞர்களுக்கு வேலை தரும் வாய்ப்பினை தயக்கமின்றி உண்டாக்கித் தருவதுதான் இன்று நாட்டின் நிர்வாக அதிகாரத்தை பெற்றிருப்பவர்கள் முதல் கடமையாகக் கொள்ள வேண்டும்."

"ஏர் உழுதல், மண் வெட்டுதல், கொல்லத்து வேலை செய்தல் ஆகிய உடலுழைப்புப் பணியில் படித்த இளைஞர்கள் ஈடுபட வேண்டுமெனக் கூறப்படுவது விரும்பத்தக்கதல்ல. இலாபகரமானது அல்ல; அதைவிட மேற்குறிப்பிட்ட தொழில்களை தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு ஈடுபட்டுவரும் படிக்காத மக்களுக்கு அத்தொழிலும் கிடைக்காமல் அவர்களும் வேலையில்லாப் பட்டியலில் சேரவேண்டிய அபாய நிலைதான் ஏற்படும். எனவே நாட்டின் செல்வத்தைப் பெருக்குவது என்ற உற்பத்திக் கருத்தை படித்த இளைஞர்களுக்கு வேலைதரும் திட்டத்தில் கொள்ளவேண்டும்,"

"படித்த இளைஞர்கள், சிறிய பெரிய இடங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு பணிதேடி அலைவதில் தம்முடைய அரிய காலம் வீணாகுவதையும், படித்திருந்தும் வேலை கிடைக்கவில்லையே என மனம் குமுறும் இளைஞர்களின் ஏமாற்றமானது சமுதாயத்திற்கே ஒரு பெரிய அபாயமாகும். ஏமாற்ற மடைந்துள்ள இவ்வித இளைஞர்கள் தங்களுக்கு எதிரியாக ஒவ்வொரு மனிதனும் இருப்பதாக எண்ணுகின்றனர். இது சமுதாயத்திற்கே பெரும் அழிவைத்தரும். இதை இன்று ஆட்சிப் பொறுப்பிலே யிருப்பவர்கள் உணர்ந்து உடனடியாக ஆவன செய்ய வேண்டும்"

என்பதாக டாக்டர் எ.ராமசாமி அவர்கள் வெளிப்படையாக ஆட்சியாளருக்குத் தக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் அவர் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவில் "கல்வியானது முழுதும் நிரம்பியுள்ள ஒன்றாகும். அதை தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி என பாகுபாடு படுத்தவும் கூடாது; ஒவ்வொரு கட்டமும் மற்றொரு கட்டத்திற்கு இட்டுச் செல்லும் தொடர் சங்கிலியாகும் என்றும், உயர்கட்டக் கல்வி கீழ் கட்டத்தின் பயிற்றுவிப்பையே தாங்கி நிற்கிறது" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே--இன்று கல்வித் துறையையும் வேலையின்மையை ஒழிக்கும் முறையையும் குழப்பிக் கொண்டு ஆட்சிபீடந்தாங்கிகள் ஆளுக்கொரு விதமாக பேசித்திரியும் போக்கினை மறந்து, கல்வி, தொழில், நாட்டு நிர்வாகம் ஆகியவைகளில் தனிச் சிறப்பும் பெற்று விளங்கும் டாக்டர் எ, ராமசாமி அவர்களைப் போன்றாரின் அனுபவமிக்க அரிய கருத்துக்களை, அறிவுரையை தக்க சமயத்தில் செய்துள்ள எச்சரிக்கையை நேரு சர்க்காரிலிருந்து அவர்தம் குட்டி சர்க்கார்கள்வரை உணர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் அதற்கேற்ப கல்வித் துறையில் அவசியமான மாற்றம் காணவும் முனைய வேண்டுகிறோம்.

இதற்கான ஆற்றல் இன்றைய ஆட்சியினருக்கு இல்லையென்றால், அத்துறையிலே திறமை மிக்கவர்களிடமாவது இப்பிரச்னையைவிட்டு, அவர்கள் கூறும் வழிவகைக்கேற்ப காங்கிரஸ் சர்க்கார் கடமையாற்ற இனியாவது முன்வரவேண்டும்.

நடக்க இருப்பவை

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகம்

குப்பையர் வீதி 1-வது இல்லத்தில் 5-2-55 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் "சமுதாயம்" என்னும் பொருள் பற்றிய பலர் பேசுவர் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு சொற்பயிற்சிக் கூட்ட பொறுப்பாளர் சி. பன்மொழியார் கேட்டுக் கொள்கிறார்.

குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றம்

6—2—55 ஞாயிறு மாலை 5-மணிக்கு, ஆற்றில் ரேடியோ திடலில் திராவிடர் திருநாள் கொண்டாடப்படும். தோழர் ஆ. க. திலகன் தலைமை வகிப்பார். தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், எஸ். எஸ். தென்னரசு பேசுவர்.

மங்களேசுவரி—தங்கராசன்

6-2-55 ஞாயிறு காலை 7-மணிக்கு திருப்பரங்குன்றம் கூடக்கோவில் உறவின் முறை நாட்டார்கள கட்டிடத்தில், தோழர் தங்கராசனுக்கும், தோழியர் மங்களேசுவரிக்கும், கே. எஸ். ராசமான் தலைமையில் திருமணம் நடைபெறும். கவிஞர் எம். எஸ். ராமசாமி, எம். அய்யாச்சாமி மணமக்களை பாராட்டிப் பேசுவர்.

காந்திமதி—ஜெயராமன்

6-2-55 ஞாயிறு காலை 8-மணிக்கு (தெ. ஆ.) மைலம் ஸ்டேஷனுக்கு அடுத்த கூட்டேரிப்பட்டில் தோழர். ரெட்டணை ஆர். கே. ஜெயராமனுக்கும், தோழியர். காந்திமதி அம்மையாருக்கும் தோழர் என். வி. நடராசன் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் திருக்குறள் முனுசாமி எம். பி. எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, ஆ. தங்கவேலு சொற்பொழிவாற்றுவர்.

அபரஞ்சி—சீனுவாசன்

கடலூர் தி: மு. க. செயலாளர் தோழர் மூ. சீனுவாசனுக்கும், தோழியர் அபரஞ்சி அம்மையாருக்கும் 7-2-55 காலை 9 மணிக்கு கடலூர் தேவனும்பட்டணம் மெயின் ரோடு 10-வது எண்ணுள்ள இல்லத்தில் தோழர் எ. கோவிந்தசாமி எம். எல். ஏ. தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், வழக்கறிஞர் இரா. இளஞ்வழுதி, சித்தார்த்தன் ஆகியோர் பேசுவர்.

மதிவாணன் தோற்றம்

சேலம் வேலூர் அடுத்த குளக்காட்டுப்புதூர் தோழர் எம். கருப்பண்ணன்—செல்லம்மாள் ஆகியோரின் குழந்தைக்கு 29—1—55-ம் நாள் குளக்காட்டுப்புதூரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்களால் மதிவாணன் என்ற பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று கொடுக்கப்பட்டது, வரப்பெற்றோம்: நன்றி—(நிர்வாகி).

அடுத்த வாரம்

தில்லை மறைமுதல்வன் தீட்டியுள்ள **தோட்டத்து மலர்கள்** என்னும் சிறப்புக் கட்டுரை அடுத்த வாரம் திராவிடன் இதழில் வெளிவரும், ஆ—ர்.

நாடு என்றால் என்ன? 1

எம். எஸ். ராமசாமி.

வாசகர்களுக்கு

நாடு என்ருல் என்ன எனும் தலைப்பில் நண்பர் எம்.எஸ். ராமசாமி அவர்கள் தீட்டும் இச்சிறப்புத் தொடர் கட்டுரையை கழகத் தோழர்களும், நாட்டுப் பிரிவினையில் ஆவர்வமுள்ள மற்ற அனைவரும் ஊன்றிப்படிக்க வேண்டுகிருேம். 'நாடு' என்னும் பொருளுக்கு நூல்கள் வாயிலாகவும் தின—வார இதழ்களின் வாயிலாகவும் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பலர் விளக்கங்கள் தந்துள்ளனர். எனினும் இக்கட்டுரையில் நண்பர் ராமசாமி அவர்கள் நாடு என்ருல் என்ன என்பதைத் துவக்கி ஒவ்வொரு பகுதியாகச் சித்தரித்து பல மேற்கோள்களையும் புள்ளிவிவரங்களையும் ஆதாரமாக எடுத்துக்காட்ட முனைந்துள்ளார். எனவே திராவிடன் வாசகர்கள் இக்கட்டுரையினை வாரந்தோறும் தொடர்ந்து கூர்ந்து படித்து நாடு என்பதற்கு மேலும் பல விளக்கங்களைப்பெற வேண்டுகிருேம். —ஆ-ர்

●

நாடு என்ருல் என்ன?

இக்கேள்வியை மேற்போக்காகப் பார்த்தால் பைத்தியக்காரன் கேள்விபோல் தெரியும் — பலருக்கு! கேட்டவர் கேலிக்குரியவராக்கப் படலாம்!

ஆனுல், இக்கேள்விக்கு விடை காணும் விதத்தில்தான் அரசியல், பொருளாதாரம், மக்கள் முன்னேற்றம்—எல்லாம் அடக்கம்!

நாடு இல்லாதபோது அரசியல் இல்லை! அரசியல் இல்லாதபோது பொருளாதாரம் இல்லை — ஒன்றுமே இல்லை!

நாடு என்ற அடிப்படை மீது தான், அரசியல், பொருளாதாரம், சுதந்திரம், சுயராஜ்யம், ஏகாதிபத்தியம், விடுதலை என்பன போன்ற அரசியல் சொற்கள் உண்டாயின.

நாடு என்ற எல்லை காரணமாகத்தான் ஒரு அரசாங்கம், மற்ருெரு அரசாங்கத்துடன் போர் தொடங்குகிறது.

சுருக்கமாக ஒருவரியில் சொல்ல வேண்டுமானுல், நாடு இல்லாமல் மனிதக் கூட்டமோ, சமுதாயமோ அரசியல் வாழ்வோ இல்லை.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த 'நாடு' தமிழகத்தைப் பொறுத்த மட்டில் புரியாத ஒன்ருகவே இன்னும் இருந்து வருகிறது. இதனுல், மக்கள் அடைந்து வரும் இன்னல் ஏராளம்!

'என்ன? நாடு என்ருல் தமிழகத்திற்குப் புரியாதா?' இப்படிக் கேட்டுப் பலர் ஆச்சர்யப்படலாம்!

ஆம்! நாடு என்ருல் தமிழகத்திற்குமட்டுமென்ன தற்போதைய நிலைமையில் திராவிடத்திற்குக் கூடப் புரியாது என்று சொல்லலாம்!

நம்மில் பெரும்பாலோர் 'நாடு என்ருல் காடு அல்லாத இடம்' என்றுதான் கருதியிருக்கிருர்கள்! 'இது என்ன நாடா? காடா?' என்பதன் உட்பொருள் நாம் மேலே கூறிய கருத்துக் கொண்டதுதான்!

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 1914-ம் ஆண்டிற்கு முன்பிருந்தே அரசியல் பேசப்பட்டு வருகிறது. ஆனுல்; அந்தப் பேச்சுக்களில் அடிப்படையான தத்துவங்களை மட்டும் காண முடியாது.

தற்காலம் 'அரசியல்' பேச்சளவில் வளர்ச்சி யடைந்திருக்கிறது. இந்த வளர்ச்சிபோல் இதற்கு முன்பு எந்த காலத்திலும் இல்லை என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

இந்தப் பேச்சு முன்னேற்றம், அரசியலில் கட்சிப் பிரதி கட்சிகள் தோன்றிய காரணத்தினுல் தான் என்று விளக்கவேண்டிய அவசியமே இல்லை.

பொதுமேடைகளில் கட்சிப் பிரதி கட்சிப் பேச்சாளர்கள், காரசாரமாகத் தங்கள் கருத்துக்களை விவாதிக்கின்றனர். ஆனுல் அவைகளை ஊடுருவி ஆராயும் போது 'நாடு என்ருல் என்ன?' என்கிற விளக்கமட்டும் இராது!

கட்சியின் கொள்கைகளைக் கூறுவர்! அரசியலின் தன்மையைக் கூறுவர்! அவற்றை அடைய வேண்டிய அவசியத்தை—வழி வகைகளைக் கூறுவர்! அந்த அரசியல் வளர்ந்து பயன்தர வேண்டிய இடத்தை மட்டும் கூறமாட்டார்கள்!

உதாரணமாகக் காங்கிரசை எடுத்துக் கொள்வோம்: காங்கிரஸ் என்ருல் இமயமுதல் குமரி வரை என்கிற காங்கிரசை யல்ல —அதில், அங்கம் வகிப்பதாகச் சொல்லும் தமிழகக் காங்கிரசை, தமிழர்களைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

காங்கிரஸ்காரர்கள் 60 ஆண்டு காலமாக நாட்டுக்குத் தொண்டு செய்வதாகப் பெருமையடிக்கிருர்கள்! 'எந்த நாட்டுக்குத் தொண்டு செய்தீர்கள்?' என்ருல், இந்தியாவுக்கு என்பார்கள்! 'இந்தியா என்ருல் என்ன?' என்று கேட்டால் எரிந்து, துடித்து, சபிப்பதுதான் பதிலாக இருக்கும்!

இவ்வாறு, கேள்விக்கு விளக்கம் தராமல் சபிப்பதுதான் அரசியல் இலக்கணமாக மிகப்பலரால் நீண்ட காலமாக் பாவிக்கப்பட்டு வருகிறது. இப்படிச் சபிப்பதில் முதன்மையானவர்கள் காங்கிரஸ்காரர்கள் தான்.

அதற்குக் காரணம்: காங்கிரஸ்காரர்களின் அரசியல் குருட்டுத்தனம்தான். மக்கள் தெளிவு பெருத காலத்தில் அரசியலை ஒரு மதம்போல ஆரம்பித்து வளர்த்தார்கள். மதத்திற்கு நாட்டின் எல்லை தேவையில்லை. அதற்கு வேண்டியது பக்தி—குருட்டு நம்பிக்கை. இப்படிப்பட்ட பக்தி, குருட்டு நம்பிக்கை ஆகிய அடிப்படைகளில் வளர்ந்ததுதான் காங்கிரஸ்!

எனவே, நாங்கள் தான் அஹிம்சையின் உருவங்கள் என்று கூறிக்கொள்ளும் அந்த அரசியல் 'பாட்டி'கள் நாட்டுக்கு எல்லை கேட்டால் சபிக்கிருர்கள். இவ்வாறு சபிப்பதும் மதப்பண்புகளில் ஒன்று தான்.

மதம், நம்பும்படி வற்புறுத்தும் அரசியல், விளக்கம் கூறும்—அனுபவ ஆதாரங்களை—சரித்திரங்களை எடுத்துக் காட்டும்.

மதம், நம்பாதவர்களை சபிக்கும் அரசியல், நம்பாதவர்களை ஆராயச்சொல்லும்.

மதத்தினிடம் பயன் கேட்டால் செத்த பிறகு மேல் உலகத்தில் கிடைக்கும் என்று ஆகாயத்தைக் காட்டும்.

அரசியலிடம் பயன் கேட்டால் புள்ளி விவரம் காட்டும், இவ்வளவு காலத்தில் இவ்வளவு பயன் என்று அறுதியிட்டுக் கூறும்— ஆகாயத்தைக் காட்டாது.

மதம். ஆகாயத்தைக் காட்டிக் கொண்டே வாழ முடியும்! காரணம்; "செத்தவர்கள் யாரும் திரும்பி வந்து மதத்தின் பலாபலன்களைச் சொல்ல முடியாது" என்கிற நிச்சயமிருப்பதே!

அரசியல், குறிப்பிட்ட காலத்திற்குள் பலாபலன்களை காட்டாமல் வாழமுடியாது'

இவ்வளவு பிரத்தியட்ச நிலைமையைக் கொண்ட அரசியல்—அரசியல் வாதிகளாயிருப்போர்—மதரீதியில் நம்பும்படி வற்புறுத்தி சபிக்கிருர்கள் என்ருல் ஆச்சரியமல்லவா?

இப்படிப்பட்ட மனப்பான்மை காங்கிரசுக்கு எதனுல் ஏற்பட்டது? என்று கேட்கலாம். இதற்கு விரிவான பதில் கொடுத்தால்தான் விளங்கும். ஆயினும், ஒருவாறு சுருக்கி கூறுவோம்.

காங்கிரசின் கடந்த கால சரித்திரங்களை ஆராய்ந்தால் அது ஒரு அரசியல் கட்சியல்ல என்பது புலனுகும்!

எப்படி எனில்; வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விரட்டுவதற்காகவே தயாரிக்கப்பட்ட ஒரு 'போர்ப் படை' தான் காங்கிரஸ்! அதில் அரசியல் இலட்சணங்கள் அதிகமாக இடம் பெருதது அதிசயமில்லை!

காங்கிரஸ்காரர்களின் பெருமைக்குரியனவாகக் கூறப்படும் 60 ஆண்டு காலத்துச் செயல்களையும்—பேச்சுக்களையும் — எழுத்துகளையும் ஒரே நேரத்தில் குவித்துக் கொண்டு தரம்பிரித்தால், அவைகளில், அரசியல், சமுதாயம், பொருளாதாரம் பற்றியவை மிக மிக சுருக்கமாகவே இடம் பெற்றிருக்கும்! ஏறக்குறைய கீழ்க்கண்டவாறு இருக்கும்.

சதவிகிதம்	
தலைவர்களைப்பற்றிய புகழுரைகள்	40%
வெள்ளை ஏகாதிபத்தியத் துவேஷம்	30%
மதத்திற்கு அரசியலுக்கும் இணைப்புத் தரல்,	20%
சுதந்திரத்தின் சுகப்பற்றிய வர்ணனை	5%
தியாகிகளின் தியாக சிறப்புக் கதைகள்	3%
அரசியல்	2%
ஆக மொத்தம்	100

இத்தகைய தத்துவங்களோடு கூடிய ஒரு போர்ப்படை நாட்டின் இலக்கணம் பற்றியோ அரசியலில் இலக்கணம் பற்றியோ என்ன கூற முடியும்?

எனவே, அந்தப் போர்ப்படையைச் சேர்ந்தவர்கள் நாட்டுக்கு எல்லையை விசித்திரமான அளவுக்கு நினைத்துக் கொண்டிருந்தார்கள்!

வடமேற்கில் ஆப்கானிஸ்தானமும், தென் கிழக்கில் இலங்கையும், கிழக்கில் பர்மாவும், இன்றைய பாகிஸ்தானும் உட்பட்டிருக்க, தற்போதைய பாரதமும், காஷ்மீரமும், சேர்ந்ததே 'இந்தியா' என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள்!

அவர்கள், கண் முன்னுலேயே பர்மாவும், இலங்கையும், பாகிஸ்தானும் பிரிந்து போயின. அவைகளை 'தனித்தனி நாடுகளாகப் பிரிக்கக்கூடாது' என்று, காங்கிரஸ்காரர்கள் போட்ட கூப்பாட்டை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது!

ஆப்கானிஸ்தானம், பர்மா, இலங்கை ஆகிய இந்த மூன்று நாடுகளும் இந்தியாவுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்பதற்குக் காங்கிரஸ்காரர்கள் அந்தக் காலத்தில் கூறிய காரணங்களும் விசித்திரமானவையே!

இதிகாசங்களில் ஒன்று பாரதம்! அதன் முக்கிய கதாபாத்திரங்களில் ஒருவன் திரியோதனன்! அவனுடைய தாயின் பெயர் காந்தாரி! அவள் காந்தார தேசத்து அரசன் மகள்! பழைய காந்தாரமே இப்போது 'ஆப்கானிஸ்தானம் என்று அழைக்கப்படுகிறது! பாரத கால இந்தியாவில் ஆப்கானிஸ்தானமும் சேர்ந்திருந்தது! எனவே, இப்போதும், சேர வேண்டியதுதான்!

பாரதக் கதா பாத்திரங்களில் ஒருவன் அருச்சுனன்! அவனுடைய மனைவியர் பலரில் நாக கன்னி என்பவளும் ஒருத்தி! அவள் பர்மாவில் பிறந்தவள்! பர்மாவின் பழம்பெயர் நாகநாடு! எனவே, பர்மாவும் இந்தியாவைச் சேர்ந்ததுதான்!

இதிகாசங்களில் ஒன்று இராமாயணம்! அதன் முக்கிய கதாபாத்திரங்களில் ஒருவன் இராவணன். அவனை வீழ்த்தியபிறகு, இலங்கை இராமனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது, இராமன் இந்தியாவைச் சேர்ந்தவன்! எனவே, இலங்கையும் இந்தியாவைச் சேர்ந்ததுதான்!

இத்தகைய விசித்திரவாதங்களை அக்காலத்தில் காங்கிரஸ்காரர்கள் மேடைகளில் கொட்டினுர்கள்! அதைக் கேட்டுக் கொண்டிருந்த இதிகாசப்பித்தர்கள் கை தட்டினுர்கள்!

பாகிஸ்தான் பிரிவினையின் போது நவகாளிஎன்ற படுகளமே உண்டான விவரம் உலகறிந்த ஒன்று!

இவற்றிலிருந்து காங்கிரஸ்காரர்களின் நாடு 'இந்தியா' என்றும்; இந்தியா என்பது பாகிஸ்தான், பர்மா, இலங்கை...ஏன்? ஆப்கானிஸ்தானமும், காஷ்மீரமும் சேர்ந்ததுதான் என்பதும் தெளிவாகும்.

காஷ்மீரம் என்பது, பாரதக் கதையிலே வரும் பஞ்சபாண்டவர் அஞ்ஞாத வாசம் செய்த விராட தேசமாம்! எனவே, அதுவும் இந்தியாவுடன் சேரவேண்டியதுதான் என்கிருர்கள்.

இதுவரை காங்கிரஸ்காரர்களின் நாட்டைப்பற்றி ஆராய்ந்தோம்.

இனி, கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள் முதலிய அகில இந்தியக் கட்சிகள் என்று பார்த்தால் அவைகள் காங்கிரசைப் போல 'இதிகாச இந்தியா' பற்றிக் கூறவில்லை என்ருலும் இந்தியா ஒரே நாடு என்று கூறத் தயங்குவது இல்லை! மொத்தத்தில் வட இந்தியத் தலைமையின் கீழ் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாமே 'ஏக இந்தியா' வாதம் பேசுவதில் முரண்பாடில்லாமல் இருக்கின்றன!

இந்த ஏக இந்தியா வாதம் எந்த ஆதாரத்துடன் வட இந்தியர்களிடம் பரப்பப்பட்டிருக்கிறதென்று நமக்குத் தெரியவில்லை. அவர்கள் கூற்றுப்படியே இதிகாசங்களை எடுத்துக்கொண்டாலும் இந்தியா ஒரேநாடு என்று காட்ட முடியாது.

ஆயினும் வட இந்தியத் தலைவர்கள் இதிகாசக் கதைகளையே சரித்திரமாகப் பாவிக்கும்படி வற்புறுத்துகிருர்கள். அதனையே அரசியல் ஆதாரமாகவும், வழிகாட்டியாகவும் பேசிக் கொண்டிருக்கிருர்கள், இதுமட்டுமா? உபமான உபமேயங்கள்கூட இதிகாசங்களிலிருந்தே கூறுகிருர்கள்! திரு. காந்தியார் சாகும்வரை 'இராமராஜ்யம்' காணவேண்டும் என்று கூறிக கொண்டிருந்ததே அவர்களுடைய அரசியல் உபமானம் இதிகாச வழி என்று எடுத்துக் காட்டும்!

இந்த இதிகாச அரசியிலிலும் இதிகாச இந்தியாவிலும், அதிக நம்பிக்கை கொண்டு ஊறிக்கிடப்பவர் தற்காலக் குடியரசுத் தலைவர் திரு. இராசேந்திரப் பிரசாத் ஆவார். இவர் இரண்டாவது தடவை குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிருர். என்ருல் இவருடைய் இதிகாச இந்தியாவுக்கும், இதிகாச அரசியலுக்கும். வடவரிடையே ஆதரவு இருக்கிறது என்றுதான் அருத்தம் இவரைப்பற்றி பிரிதோரிடத்தில் விரிவாகக் கூறுவோம்.

வட இந்தியரின் அரசியல் வாழ்வில், அடி நாள் தொட்டு, மதம், செல்வாக்குப் பெற்று வந்துள்ளது. அதற்குக்காரணம் வடக்கில் பார்ப்பனீய ஆதிக்க மிகுந்த இந்துமதமும், இஸ்லாம் மதமும் ஒன்றையொன்று மோதிக்கொள்ளும் விதத்தில் பெருகி இருப்பதாகும்.

இந்த நிலைமையில் காங்கிரசை மதவாதிகள் நன்கு பயன்படுத்துகிருர்கள்— பயன்படுத்துவார்கள்.

திராவிடர்களின் தீமைக்கெல்லாம் ஆதிகாரணம் இந்து மத வளர்ச்சிதான். இந்து மதத்திற்கும், காங்கிரசுக்கும், ஆதியான— ஆணித்தரமான தொடர்புண்டு. இதனை, கடந்த 4-1-55.ல் மதுரைக்கு வந்திருந்த அகில இந்திய இந்து மகா சபைப் பொதுச்செயலாளர் திரு. தேஷ்பாண்டே கூற்றிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம். அவர் கூறுகிருர்.

"திராவிட இயக்க உறுப்பினர் மீதோ, மற்றவர்கள் மீதோ எனக்கு வெறுப்பு கிடையாது. இந்து மதக்கடவுள்களைப் பற்றி இழிவாகப் பேசினுல், அதை அனுமதிக்க முடியாது. இந்துக்கள் அனைவரும் அதை முழுமனதுடன் எதிர்க்க வேண்டும். இந்துக் கலாசாரத்தைப் பழிப்பவர், ஏன், மற்றவைகளைப் பற்றிப் பேசுவதில்லை? இந்துக்களை ஒன்று சேர்க்கவும், அவர்களுக்கு வேண்டிய படிப்பினைகளைக் கூறவும் தான் இந்து மதமும், இந்துக் கடவுள்களும், இருக்கின்றன. அப்படிப்பட்ட கடவுள்களையும், இந்து மதத்தையும் சிலர், தற்போது பாழ்படுத்துகிருர்கள்.

இக்குழப்பமான தத்துவத்திலேயே வடநாடு, தென்ருடு என்று பேசுகிருர்கள். பிரிவினை உணர்ச்சி அதிகமாகிக்கொண்டே போனுல், 20-க்கு மேற்பட்ட பிரிவினை செய்யப்பட்ட மாகாணங்களையும், அதன் மக்களையுந்தான் காண முடியும்!

இந்தப் பிரிவினை உணர்ச்சியைத்தான் இந்து மகாசபை தொடக்க முதல் எதிர்த்துக் கொண்டு வருகிறது. இந்துமத சாஸ்திரக் கொள்கைகள் அனைத்தும் ஒருவித அடிப்படையில்தான் இருந்து வருகின்றன.

வடநாட்டில் உள்ள புண்ணிய ஸ்தலங்களுக்குத் தென்ருட்டவர்களும், தென்ருட்டில் உள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கு வடநாட்டவர்களும் செல்கின்ருர்கள். கடவுள் தத்துவார்த்தத்தில் வேற்றுமைக்கு இடமே கிடையாது.

ஆகவே, பிரிவினை உணர்ச்சியை விட்டொழித்து, இந்துமதத்தின் உன்னத இலட்சியங்களுக்காக பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

மேலே கண்ட வாசகங்கள் ஏக இந்தியாவை எப்படி வற்புறுத்துகின்றன என்பது நன்கு விளங்கும்.

'பிரிவினை கூடாது' என்பதில் வடவர்கள் அனைவரும் கட்சிபேதமில்லாமல் ஒன்று படுகிருர்கள். அந்தக் குருட்டு வாதத்தையே, அவர்களின் தொண்டர்களாக இருக்கும் திராவிடர்களும் ஒலி பெருக்கிக் கொண்டிருக்கிருர்கள்!

—(தொடரும்)

●

சவுண்டிகள் திருவிளையாடல்

——நக்கீரன்——

1947-ம் ஆண்டிலிருந்து; இந்தியத் துணை கண்டத்தின் அரசியல் துறையிலே, என்றும் காணுத அளவுக்கு விசித்திர சம்பவங்கள்வளர்ந்துவருகின்றன. அதிலும் காங்கிரஸ் தலைமைப்பீடம் செய்யும் தகிடுதத்தம் இருக்கிறதே சொல்லி முடியாது. வெள்ளையர் ஆட்சியிலே எங்தெந்த சம்பவங்களை அல்லது சம்பிரதாயங்களை மானக்கேடானது என்று கூறி கொக்கரித்து வந்தார்களோ அந்த அரசியல் சம்பவங்களில் காங்கிரஸ் மேலிடம் இன்று இரண்டறக் கலந்திருப்பது மட்டுமல்ல, காய்ந்த மாடு கம்பத்தில் வீழ்ந்தது போல அரசியல் துறையின் நற்பண்பைச் சீரழித்து வருகின்றனர். மாற்றுக் கட்சிக்காரர்கள் என்பதற்காக நாம் இவ்வாறு கூறுவதாக எவரும் கருதிவிடக் கூடாது. தக்க விளக்கங்களுடனேயே நாம் இக் குற்றச்சாட்டினை எடுத்துக் காட்டுகிறோம்.

*

வெள்ளையர் ஆட்சியிலே, சர், திவான் பகதூர், ராவ் பகதூர் போன்ற பட்டங்களும், மெடல்களும் கொடுக்கப்பட்டு வந்தன. அன்றைய ஆட்சிமுறையில், அதற்கான நிர்வாகத்தில் நேர்மையும், திறமையும் உள்ளவர்களை ஊக்குவிக்கவும், அதுபோலவே அறிஞர்களைப் பாராட்டவுமே இவ்விதமான பட்டங்கள் வழங்கப்பட்டன. எனினும் இப்படி பட்டம் பெறுவோர் எவராயிருப்பினும் அவர்கள் துரோகிகள் என்று கேலி செய்தனர் தேசியத்தார். அதுமட்டுமல்லாது சுயராஜ்ய ஆட்சியிலே பட்டம் வழங்கும் முறை அடியோடு ஒழிக்கப்படும் என்று கர்ஜித்தனர்.

ஆனுல் இன்றோ காங்கிரஸ் ஆட்சியினரால் பாரத ரத்ன— பத்மவிபூஷண—பத்தபூஷண என்றெல்லாம் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. உத்தியோகஸ்தர்களுக்கு குடியரசு விழாவன்று மெடல்களும் வழங்கப் பட்டிருக்கின்றன. இப்பட்டங்கள் தேசியத் திருமேணிகளைத் தேடிச் சென்றிருப்பது கூட ஆச்சர்யமில்லை! பிரிட்டிஷ் ஆட்சியின் போது மிக உயர்ந்த பட்டங்களைப் பெற்றிருப்பவர்களையும் காங்கிரஸ் சர்க்காரின்இப்பட்டங்கள்வலியவலிய தேடிச் சென்று மரியாதை செய்திருக்கிறது, அன்று தாங்கள் பட்டம் பெறும் வாய்ப்பினைப்பெறவில்லையே என்பதற்காக பட்டம் கொடுப்பதை தேசியத் தலைவர்கள் நையாண்டி செய்தார்கள் போலும்! இல்லையெனில் இன்று பிரிட்டிஷாரை கார்ப்பி யடிப்பது போல டெல்லி ஆதிக்கம் பட்டங்கள் வழங்குவது கடைந்தெடுத்த தகிடுதத்தமல்லவா யென்று கேட்கிறோம். தென்ருட்டு தேசியத் தோழர்களே சிந்தியுங்கள்.

*

கம்யூனிஸ்ட் கட்சியினரால்தேர்தல் காலங்களில் பிறகட்சிகளின் உதவிகளைப்பெற **ஐக்கிய முன்னணி** அமைக்கப்பட்டு வந்த விவரங்களைப் பொதுமக்கள் அறிவர் அந்த சமயங்களில் காங்கிரஸ் தலைவர்கள், ஐக்கியமாவது-முன்னணியாவது என்று ஓலமிட்டு நையாண்டி செய்ததையும் ஓட்டர்கள் மறந்திருக்க மாட்டார்கள். தங்கள் கட்சிக்கு யோக்யதை குறைந்து விடவே, பிற கட்சியினரிடம் காவடி தூக்குகின்றனர்—இதற்குப் பெயர் ஐக்கிய முன்னணியாம்! இதற்கு ஐக்கிய முன்னணி என்பதைவிட அரசியல் சோரம் என்று கூறலாமே என கேலி செய்தனர் தேச பக்தர்கள்!

இன்றோ ஆந்திரத் தேர்தலிலே **ஐக்கிய காங்கிரஸ்** அமைக்கப்பட்டிருக்கிறது! அதுவும் எப்பேர்ப்பட்டவர்களுடன் சேர்ந்து தெரியுமோ? காங்கிரஸ் இயக்கத்தைக் கண்டவாறு தூற்றியும் மிககேவலமாகத் தாக்கிப் பேசியும்வந்த சில்லரைக் கட்சிகளுடன்—அதாவது காங்கிரஸ் ஒழுக்கக்கேடான கூடாரமாக மாறி விட்டது என வெளிப்படையாகப் பேசிவிட்டு வெளியேறியவர்களிடம் இன்று ஆசியாவின் ஜோதி காங்கிரஸ். நான் இப்போது நவீன பத்தினியாகிவிட்டேன், என்னுடன் கூடிக்குலாவ வாரும் என்று அழைத்திருக்கிறது. சுருங்கக் கூறின் எட்டி உதைத்தகாலுக்கு முத்த மிட்டிருக்கிறது. இதைப் போன்ற தன்மானமற்ற முறைகளை அரசியல் துறையிலே இது வரை எந்தக் கட்சியினருமே கடைப் பிடித்ததில்லை. ஆனுல் காங்கிரசின் தலைமைப் பீடமோ இவ்வளவு மட்டமான செயலில் இறங்கியிருக்கிறது. ஆதிக்கவெறியில் சிறிது பள்ளம் விழுந்தால் போதும் நாலாந்தர ஆட்களின் காலிலும் விழத் தயங்குவதில்லை காங்கிரஸ்-ஆக, கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணி அமைத்தபோது அது தேசத் துரோகம் அல்லது கோமாளிச் செயல் என்று கூறப்பட்டது—ஆனுல் இன்று காங்கிரஸ் கீழ்த்தர முறையிலே **ஐக்கிய காங்கிரஸ்** அமைத்திருக்கிறதே— இதற்கு என்னபெயர்—தகிடுதத்தமா—பித்தலாட்டமா? திராவிடத் தேசியத் தோழர்களே சிந்தியுங்கள்.

*

வடநாட்டுத் தலைமையைக் கொண்ட காங்கிரசின் பித்தலாட்டங்களை விளக்குவதெனின் இன்னும் விரிந்துகொண்டே போகும். எனவே இரண்டொன்று சம்பவத்தை மட்டுமே எடுத்துக்காட்டினேம்.

காங்கிரஸ் கூடாரத்தின் பிற்போக்குதான் இத்தன்மையது என்ருல் **கம்யூனிஸ்ட் கட்சியினரோ** பித்தலாட்டத்தில் யார் கைதேர்ந்தவர்கள் என்று பந்தயம் வைப்பதைப் போல ஆதிக்க முகாமான காங்கிரசையும் மிஞ்சி நிற்கின்றனர். நாம் உண்மையைச் சொன்னுல் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு உடம்பெரிச்சல் ஏற்படு

12-ம் பக்கம்

எதிர்கால இலக்கியம்

எதிர்காலத்தைப் பற்றி எண்ணாத மக்களேயில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொருதுறையின் எதிர்காலத்தைப் பற்றி எண்ணுவர். இலக்கியத்தைச் சுவைப்போரும் அதனைச் சுவையோடு ஆக்கித் தருவோரும் அத்துறையின் எதிர்காலத்தைப் பற்றி எண்ணுவர்.

அதுமட்டுமின்றி மாளிகையில் சிலரும் மண்குடிலில் பலருமாக வாழும் நிலை மாறி அனைவரும் பேதங்கள் ஏதுமின்றி ஒப்பப் பராய் விடவேண்டும் என்ற தூய்மையான பொதுநல நோக்கத்தோடு காரியமாற்றும் செம்மல்களே எதிர்கால நிகழ்ச்சிகளைப் பற்றி பொதுத் தன்மையில் நின்று ஆய்ந்து நடக்கிறார்கள்.

மதப்பற்றை மாய்த்து விடுமோ, பகுத்தறிவு வளர்ச்சி என்றஞ்சி அதனை அழிக்கத் திட்டமிட்டு சட்டமும் செய்வர், மதவாதிகளும் அவர்தம் கூட்டமும்.

எதிர்காலத்தைப் பற்றி எண்ணத் துவங்கும்போது கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்து நிகழ்காலத்தோடு அதனை ஒப்பிட்டுப் பார்த்துத் திட்டமிடுவதே முறை.

சங்க காலத்திலே நம் எண்ணத்தைச் செலுத்தும்போது வாழ்விற்கோர் அரிய இலக்கணமான தொல்காப்பியத்தைச் சந்திக்கிறோம். "Tow things are greater than all things are one is love and the other is war" எல்லாவற்றிலும் சிறந்தவை இரண்டு ஒன்று காதல், மற்றது போர் என்னும் ஹோமரின் (Homer) கருத்துப்படி அங்கு அகமும் புறமும் பற்றிய சிறந்த நூல்களான அகநானூறும், புறநானூறும், கலித்தொகையும் நம்முன் கருத்தின்பம் பயக்கிறது. அறிவுரையை அள்ளித் தெளிக்கும் பதினென் கீழ்க் கணக்கு நூல்களும் நமக்கு ஊட்டும் இன்பச் சுவை ஓர் தனிச்சிறப்பு.

'Literature is a record of best thoughts'—'சிறந்த நினைவுகளின் குறிப்பேடே இலக்கியமென்கிறார்' எமர்சன் (Emerson) அவ்வரிய இலக்கியங்களுள் பொதிந்திருக்கும் அரிய கருத்துகள், அக்கால மக்களின் நினைப்புகளே யென்பது அறிய வருகிறது. அது மட்டுமின்றி 'Literature is fundamentally an expression of life—வாழ்க்கை நெறிகளை வெளிப்படுத்துதலே, இலக்கியத்தின் அடிப்படை நோக்கம்' என்கிறார் ஹட்சன் (Hudson) அக்காலத் தமிழரின் வாழ்க்கையின் எதிரொளியே சங்க இலக்கியங்கள்.

அதுவுமின்றி அக்கால மக்களும் கவிஞர்களும் நல்லறிவோடும், சுய உணர்வோடும் வாழ்ந்திருக்கிறார்கள். அதனாற்றான் நல்ல இலக்கியங்களை ஆக்கியிருக்கிறார்கள். இதை நாம் நன்றாக கருத்தில் கொள்ள வேண்டும்.

காலம் நகர நகர நாம்பெற்றது வளர்ச்சியா அன்றா என்பவற்றை ஆய்ந்து பார்க்க வேண்டும். கால வளர்ச்சியில் மக்கள் மனமும் செயலும் மாறுபட்டு வந்திருக்கிறது. இம்மாறுபாட்டிற்குக் காரணம் பல. அவற்றை அவ்வக்கால இலக்கியங்களே எடுத்தியம்புகின்றன.

அரிய கருத்துக்களைத் தேடிப் பிடித்து இலக்கியங்களின் வாயிலாகத் தந்து கொண்டிருந்த ஆராய்ச்சியறிவு சிறிது சிறிதாக மங்கி யிருக்கிறது. மக்கள் வாழ்க்கையின் வரம்புகளை அமைத்துத்தந்த அறநூல்களின் பெருமையும் மறைந்து வந்திருக்கிறது.

புலவர்கள் மக்கள் வாழ்க்கையைப் பற்றி அதிகமாக எண்ணாமல் மக்களைப் படைத்த மகேசனைக் கற்பனை உலகிலே உண்டாக்கி, அவனுக்காக, அவனின் உற்றார் உறவினருக்காக பெரும் பெரும் நூல்களைச் செய்தனர். சமயங்கள் பலவாயின. போட்டியும், பூசலும், பொறாமையும் அவற்றிடையே மிகுந்தது.

அறிவை வளர்க்க வேண்டியதும், அன்பு நெறியைப் பரப்ப வேண்டியதும், அகம், புறமெனப் பிரித்து அழகழகாகச் சொல்லி இருக்க வேண்டியதுமான இலக்கியங்கள், இந்த அர்த்தமற்ற அறிவிழந்த பூசல்களுக்குக் கருவிகளாய் அமைந்தது.

அகமும், புறமும் அறிவுக் கருத்துகளும் துள்ளிவிளையாடும் தெள்ளுதமிழ் இலக்கியங்கள் இடைக்காலத்தில் ஏன் பெருவாரியாகத் தோன்றவில்லை. சங்க காலத்தைப் போல. முதல் நூற்களே பெருவாரியாக எழாத காலமாக இடைக்காலம் ஏன் மாறியது? இதற்கென்ன பொருள்? அறிவுக்கும் சிந்தனைக்கும் பஞ்சமேற்பட்டு வந்தது என்றுதானே அர்த்தம். இதற்கேற்பவே மக்கள் நிலையும் இருந்திருந்தது என்பதில் சற்றேனும் ஐயம் இல்லை.

அகண்டபெரும், நிலப்பரப்பை ஆண்டவன், அகிலமெங்கும் வெற்றி முழக்கமிட்டவன்—அறநெறியினின்று அணுவளவும் பிறழாதவன், குறுகிய இடத்தையும் ஆளத்திறனின்றி அயலவரிடம் சிக்கச் செய்தான்; வீரம் வெறும் சொல்லளவிலேயே மாறியது; அறம் பிறழ அஞ்சவில்லை, ஏன்? எங்கே அந்த மறவர் வாழ்க்கை? வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாது வெற்றிகண்ட வீரம் வஞ்சகரின் மத மாயையிலே மங்கி மறைந்து போயிற்று.

உரிமையோடு உலகெங்கும் உலவிய தமிழன் உரிய நாட்டினின்று உழைக்க வேற்றுநாடு சென்று உழைத்து வாழ்ந்தும் வெளியே போவென்று விரட்டப்பட்டு வேதனைக் கடலிலே மிதக்கிறான்.

வேங்கையெனச் சீறி வடவரை வதைத்தழித்தத் தமிழினம் இன்று அவர்களிடமே அடிமை வாழ்வு நடத்துகிறது. புதுப் புது விஞ்ஞானப் பொருள்களைக் காணும் உலகிற்கு தன் காவி கமண்டலத்தின் பெருமையையே காட்டி நிற்கிறான். நல்லவர்கள் நாட்டை வஞ்சகத்தில் வல்லவர்கள் தாழ்த்திட்டார்.

இன்றைய மக்கள் நிலையோ

'அழியா மூடத்தனத்தை—ஏட்டில்
அழகாய் வரைந்திடும் பழிகாரர் தம்மை
முழுதாய்ந்த பாவலர் என்பார்"

என்பதாகத்தான் உள்ளது.

நல்லவற்றிற்கும் அல்லாதவற்றுக்கும் வேறுபாடு காண இயலாத மக்களாக மாற்றப்பட்டுள்ளனர். இக்கூட்டத்தார் வாளா விருப்பதும் இல்லை. அறிஞர்களை அற்ப மொழிகளால் ஏசியும் பேசியும் வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் அவரவர் தம் அறிவில் ஊறி நிற்கும் கடவுட் காவியங்களே.

தமிழகத்தில் மட்டுமல்ல இந்நிலை, தரணி எங்கும் பலநாடுகளிலும் இருந்தது.

நாம் எழில் பூங்காவாக காணும் 'சீனு' வின் முட்புதர்களை அழித்து நாம் காணும் எழிலைக் கூட்டியது "கன்பூஸியஸ்" போன்றோரின் புரட்சி இலக்கியங்களே யாகும்.

புது உலகிலே பெருமிதத்தோடு காட்சியளிக்கும் ரஷ்யாவின் மூடக்கட்டுகளை உடைத்தெறிந்தது டால்ஸ்டாய், லெனின் போன்றோரின் மறுமலர்ச்சி எழுத்தோவியங்களேயாகும்.

மன்னராட்சிக் கொடுமையை ஒழித்து மக்களாட்சியை நிறுவிய பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது அறிஞர்கள் ரூசோ, வால்டேர், டிபிரோ போன்றோரின் எழுத்துக்களே.

பெற்ற தாயகத்தின் வரலாற்றை உணர்ச்சியூட்டும் வகையில் பல எதிர்ப்புகளுக்கிடையேயும் தீட்டித்தந்து புரட்சி நூல்களை இயற்றியும் பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களிடையே புத்துணர்ச்சியை ஊட்டி விடுதலை வீரர்களை உண்டாக்கித் தன் கல்லறையிலே தாயகத்தின் விடுதலையைக் கண்டான் ரிஸால்.

மனிதர்களாகப் பிறந்தும் மாக்களைப் போல் உரிமையின்றி அடிமைகளாய் இருந்த நீக்ரோக்களுக்கு 'They are slaves who fear to speak for the fallen of the weak—வன்மை யிழந்து வீழ்ச்சியுற்றவருக்காகப் பரிந்து பேசாதவர்கள் உரிமை பெற்றிருப்பினும் அடிமைகளே' என்று கடுமையாக இடித்துரைத்து விடுதலையைத் தேடித்தர உதவியது, ரஸ்ஸெல் (Russell) போன்றோரின் எழுத்தோவியங்களே.

உலகத்தில் மதத்தின் பேராலும் அதன் மூலங்களான ஆண்டவன்கள் பெயராலும் நடந்துவந்த மோசடிகளை அஞ்சாது விளக்கிப் புதுநெறியூட்டி மக்களை மறுமலர்ச்சி யுலகிற்கு அழைத்து வந்தான் பேரறிஞன் இங்கர்சால்.

இவைகளைக் காணும்போது அந்நாடுகளெல்லாம் அடைந்திருந்த வீழ்ச்சி இலக்கியங்களின் துணையாலே எழுச்சியுற்றிருக்கிறது. ஆனல் நாம் இன்னும் முழுதாக அந்நிலையை அடையவில்லையே. ஆகவே இனி எழும் எதிர்கால இலக்கியங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காண்போம்.

முதலில் எல்லோரும் கல்வியறிவு பெற்று உண்மைக் கண்ணுளாராக விளங்கச் செய்ய மக்களை அறிவுவழிபடுத்தும்

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்க யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோரேழைக் கெழுத்தறிவித்தல்"

—பாரதியார்

இவைபோன்ற கருத்துக்களைக் கூறும் நூல்கள் இன்னும் எழுதல் வேண்டும்.

மறைந்து கிடக்கும் தாய்மொழியின் உயர்ந்த தன்மையை மக்களுக்கு ஊட்ட

'உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் [நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் [தமிழில்
சலசலென இவ்விடத்தும் பாய்ச்சிவிட [வேண்டும்'

—பாரதிதாசன்

என்பன போன்ற கருத்துள்ள நூற்களும் எழுதல் வேண்டும்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்கவும், தாயகத்தின் அடிமை நிலையை எடுத்துவிளக்கி விடுதலைக்கு வழிவகுக்கவும், வாழ்க்கை நெறியினைச் செம்மையாக அறிவுறுத்தவும், நம்மை அழித்துவிட்ட சாதி, சமய பேதங்களை களைந் தெறியவும் புத்தம் புதிய தேனினுமினிய தீந்தமிழ் இலக்கியங்கள் எழுதல் வேண்டும்; அவ்வாறு எழுந்து,

'தாயெழிற்றமிழை எந்தன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற்றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில்
வந்து பாயும் நாளெந்த நாளோ'

—கோ. திருமாவளவன்

செய்திகள்

சித்தக்காடு ராமையா முழக்கம்

ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தின் நான்காவது ஆண்டுவிழா 21—1—55 மாலை மாயூரம் ரயில்வே சந்திப்புக்கு அருகிலுள்ள திடலில் சித்தக்காடு கே. ராமையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். இளங்கோ ஆண்டு அறிக்கை படித்தார். பின்னர் தோழர் கே. கலியமூர்த்தி நாட்டுப்பண் பாடியபின் தோழர் க. அறிவழகன் பேசினார். சித்தக்காடு ராமய்யா அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது.

பெரியோர்களே! தோழர்களே! இந்த விழாவிற்கு என்னை தலைமை தாங்க பணித்தமைக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன். ஆசிரியர் வேலாயுதம் திருச்சி ஜில்லா, அரியலூர் தாலுக்கா காடுகுளம் என்ற கிராமத்தில் ஏழை வன்னிய சமூகத்தில் பிறந்தவர். திருச்சி ஜில்லா போர்டு நிர்வாகத்திலுள்ள பள்ளியில் ஆசிரியர் தொழில் செய்து வந்தார். சகலதுறைகளிலும் பிற்போக்குஅடைந்திருக்கும் தனது சமூகம் உள்ளிட்ட சகல பிற்போக்கு சமூகங்களுக்கும்—பிற்போக்கு அடிமை நிலைமையும் நீங்க வேண்டுமென்று உபதேசித்து வந்தார். புரட்சிகரமாயும் அவர் ஒன்றும் சொல்லிவிடவில்லை. திருட்டு பொய் இல்லாமலும் சுத்தமாயும் படிப்பு வாசனையுடனும் இருக்க வேண்டுமென்றும்—பகுத்தறிவு பெறவேண்டுமென்றும் தான் சொன்னார். பரிதாபமே உருவாய் அமைந்த பழங்குடி மக்களுக்கு இந்த இதோபதேசம்செய்த ஒரு பாவத்திற்காக வேலாயுதம் கொல்லப்பட்டார். அதிகார ஆணவம்—ஜாதித்திமிர்—பணத்திமிர் படைத்த அரியலூரில் அப்போதிருந்த சில காங்கிரஸ் பீஷ்வாக்களுக்கு உண்மைக்குப்பாடுபடும் வேலாயுதத்தின் செய்கை பிடிக்காத ஒரு காரணத்தால் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டதோடு மாத்திரமல்ல—வேலாயுதம் தூக்கிட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக கொலையை மறைப்பதற்காக—ஒரு மரத்தில் கட்டி தொங்கவிடப்பட்டிருந்தார். அப்படி கட்டி தொங்கவிடப்பட்டிருந்த ஆசிரியரின் சவம் பலவித சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை பார்க்கும்போது அவருடைய தியாகம் மிக உச்சமானது என்று கூறுவேன். அவரது அத்தான பணியை நமது நண்பர்கள் ஊன்றிக் கவனிப்பதோடு மிக ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டும்.

இப்போதும் காங்கிரசிலுள்ள சில பீஷ்வாக்கள் மாற்றுக் கட்சிக்காரர்களை கொலைசெய்துவிட்டால் தங்கள் ஆதிக்கம் சிரஞ்சீவியாக வாழ ஒரு சாதனமென்று சுலபமாக கருதுகிறார்கள். இது உண்மை நோக்குடைய எனது காங்கிரஸ் நண்பர்கள் ஊன்றிக் கவனிப்பதோடு மாத்திரமல்ல அதற்கு அவசியமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குப் பல காங்கிரஸ் நண்பர்கள் உத்தம நண்பர்களாய் இருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த ஜில்லாபோர்டு தேர்தலில் நமது மாயுரம் டவுன் தொகுதிக்கு எனதுகாங்கிரஸ் நண்பர் முகமது இஸ்மாயிலை போட்டியில்லாமல் வந்ததற்கு முதல் பங்கு எனக்கு என்பதோடு மாத்திரமல்ல—முதல் மாலையும் எனக்குத்தான் போட்டார்கள். குடியாத்தம் தோதலைப்பற்றியும் உங்களுக்குத் தெரியும்! இதையெல்லாம் யோசித்துப் பார்க்காமல் காங்கிரசில் சில நெறி தவறியவர்கள் இருப்பதை எனது காங்கிரஸ் நண்பர்கள் கவனிக்க வேண்டாமா?



மாவீரர் ஆசிரியர் வேலாயுதம்

சித்திரவதை செய்யப்பட்ட நமது ஆசிரியர் வேலாயுதம் கொலை, முதல் விசாரணையில் கைவிடப்பட்டது. உண்மை காங்கிரஸ்வாதியாக அப்போது இருந்த பிரதம மந்திரி ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் நம் ஆசிரியருக்குநடந்த விளைவை கண்டு பிடிக்கும்படி செய்தாலும் "நியாயம்" வாதிபக்கம் எவ்வளவு உச்சமாய் இருந்தாலும் முடிவு என்ன என்பது உங்களுக்கு தெரியும். ஆகவே ஆசிரியர் வேலாயுதம், தாளமுத்து நடராசன், மஜீத் போன்ற மாவீரர்களின் சேவையை நாம் போற்றுவதோடுமட்டும் நில்லாது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை வெற்றிபெற பாடுபடவேண்டும் என்று குறிப்பிட்டார்.

க. புதுப்பட்டி.

24—1—55 இரவு 8 மணிக்கு தரகு மண்டியில் தோழர் பி. என். வி. பாண்டியர் தலைமையில், மூவேந்தா கலைக்கூடம் அமைக்கப்பட்டது. பி. என். வி. பாண்டியர் தலைவராகவும், ஆர். டி. இராசு துணைத்தலைவராகவும், பி. ரெங்கசாமி செயலாளராகவும் டி. எஸ். ஆசிரியாபிள்ளை பி. எ., பொருளாளராகவும், ஆர். கே. கே. சாமி அமைப்பாளராகவும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக 7 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பயிற்சி ஆசிரியராக தோழர் டி. எஸ். ஆசியாபிள்ளை பி. எ., துணைப்பயிற்சி ஆசிரியராக தோழர் பி. அம்மையப்பன் ஆகியோரை நியமிக்கப்பட்டது. கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை அரசியலார் இப்போது நிறைவேற்றி யிருக்கும் நாடக தடை சட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேற்படி சட்டத்தை உடனே திரும்பப் பெறுமாறு இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தோழர் ராதா அவர்கள் நடத்திவரும் வால்மீகி இராமாயணத்தை "கீமாயணம்" என்று செய்தித்தாள்கள் எழுதுவதை இக்கூட்டம் கண்டிக்கிறது.

இராதாபுரம்

திராவிடர் திருநாளை முன்னிட்டு 15—1—55-ல் தோழர் ஈ. முத்தையா தலைமையில் இவ்வூர் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் ஒரு நாள் இன்பம் என்ற நாடகம் பொது மக்களுக்கு நடத்திக் காட்டப்பட்டது தலைவர் நாடக மன்றத்தாரையும் நடித்த தோழர்களையும் பாராட்டிப் பேசினர்.

அருப்புக்கோட்டை

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் அறிக்கைப்படி இந்நகர் தி. மு. கழகத்தின் ஆதரவில் கைத்தறியாளர் ஆதரவு வாரம் 11-1-55-ம் நாள் கொண்டாடப்பட்டது. காலை 10-மணிக்குத் தியாகராய வாலிபர் சங்க முன்பிருந்து கைத்தறி ஜவுளி வண்டியுடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் புடைசூழ ஊர்வலம் நடைபெற்றது. தோழர். எம். எஸ். இராமசாமி அவர்கள் விற்பனையைத் தொடங்கி வைத்தார்கள். ஊர்வலம் நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் சுற்றி இரவு 9-மணிக்கு துவங்கிய இடத்திற்கு வந்தடைந்தது. நகரின் சந்திப்பான இடங்களில் எல்லாம் தோழர் எம். எஸ். ராமசாமி அவர்கள் கைத்தறித் துணியை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் சொற்பொழிவாற்றினார். அன்றைய மொத்த விற்பனை ரூ. 250

பொங்கல் பெருவிழா

திராவிடரின் தனிப்பெரும் திருநாளான பொங்கல் விழாவை இவ்வாண்டு அருப்புக்கோட்டை தி. மு. க. மிகச் சிறப்பாக கொண்டாடியது. 14-1-55 முதல் 17-1-55 வரை ஒவ்வொரு நாளும் சிறந்த சொற்பொழிவு, மற்றும் நாடகம், நடனம் விளையாட்டரங்கம், கவிதை, கட்டுரை, சித்திரம், கழக முக்கியஸ்தர்களின் கயிறிழுப்புச் சண்டை ஆகியவை இடம் பெற்றன.

தியாகராய வாலிபர் சங்க முன்பாக அமைக்கப்பட்ட எஸ். எஸ். பழனிச்சாமி மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது முதல் நாள் (14–1–55) ஒலிபெருக்கி மூலம் இசைத் தட்டுகள்.

இரண்டாம் நாள் (15–1–55) மாலை 6—மணிக்கு கவிஞர் எம். எஸ். ராமசாமி தலைமையில் விருதை செந்திக்குமார் நாடார் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் தோழர். கே. திருமாறன் 'சமுதாயம்' என்கிற தலைப்பில் அரியதொரு சொற்பொருவு நிகழ்த்தினார். பின்னர் தலைவர் முடிவுரையுடன் துணைச் செயலாளர் மா. பொன்னுசாமி நன்றி கூறலுடன் இரவு 11 மணிக்கு விழாவின் அன்றைய நிகழ்ச்சி முடிவுற்றது.

மூன்றும் நாள் (16-1-55) பிற்பகல் 3 மணிக்கு தொடங்கியது. முதலில் விளையாட்டரங்கம், மெது மிதிவண்டி விடுதல், நீளத் தாண்டுதல், உயரத் தாண்டுதல், மிதிவண்டி, இசை நாற்காலி, கழக முக்கியஸ்தர்களின் கயிறிழுப்பு (இதில் தோழர் சிவ. சண்முகசுந்தரம், செயலாளர், துணைச் செயலாளர் ஆகியோர் இருந்த கோஷ்டி தோற்றது குறிப்பிடத்தக்கது) நடைபெற்றது. அதன்பின் தோழர். சிவ. சண்முகசுந்தரம் தலைமையில், தோழர்கள் சு. காளிமுத்து, சோ. முத்துராமலிங்கசேது, பி. பி. என், நல்லத்தம்பி, சி. பிச்சைமுத்து ஆகியோர் 'அரசியல்' என்னும் தலைப்பில் அரியதொரு கருத்து விருந்து அளித்தார்கள். தலைவர் முடிவுரையுடன் சொற்பொழிவு முடிவுற்றது. பின் இரவு 10-மணிக்கு எம். எஸ். ஆர். மறுமலர்ச்சி நாடக மன்றத்தார் கலைஞர் மு. கருணாநிதி எழுதிய 'பரப்பிரம்மம்' என்ற நாடகத்தை திறம்பட நடித்தார்கள்.

நான்காம் நாள் (17–1–55) விழா 4—மணிக்குத் தொடங்கியது. ஆரம்பத்தில் கம்புவீச்சு நடைபெற்றது. பின் புளியம்பட்டி பொன்னு குழுவினர் சிறந்தொரு இசைவிருந்தளித்தார்கள் அதன்பின் சொற்பொழிவு இரவு 7—மணிக்குத் தொடங்கப்பெற்றது. கவிஞர் ராமசாமி தலைமையில் தம்பி ஆசிரியர் தில்லை வில்லாளன், திராவிடன் ஆசிரியர் என். வி. நடராசன் ஆகியோர் பொருளாதாரம் என்கிற தலைப்பில் பொருள் மிகுந்தொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின் கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகியவற்றில் சிறந்தவைகளுக்கும் மற்றும், விளையாட்டரங்கத்தில் வெற்றி பெற்றோர்களுக்கும், ஆய்வாளர்த்தின் முடிவுப்படி தோழர் என் வி. நடராசன் அவர்கள் பரிசு வழங்கினார்கள். பரிசுப் பொருள்களும், தலைவர்களுக்கு அணிவித்ததும் கைத்தறி ஆடைகள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். முடிவில் தோழர் சோ. முத்துராமலிங்க சேது அவர்கள் நன்றி கூறலுடன் இரவு 2 மணிக்கு விழா முடிவுற்றது. விழாவின் ஒவ்வொரு நாளும் பல்லாயிரவர் பங்கு பெற்றதுடன் பெரிய திருவிழா போன்று காட்சியளித்தது.

பம்பாய்

தி. மு. கழகத்தின் சிறப்பு

ப. தி. மு. க. பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த கிளர்ச்சி ஆசிரியர் தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்களின் கருத்து:

தமிழ் நாட்டில் நான் காணுத சில உயர்ந்த முறைகளை ப. தி. மு. க. கடைப்பிடித்து வருவதுகண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒழுங்கான கடிதப் போக்குவரத்து அவைகளுக்குத் தனித் தனியே Fileகள் வரவு செலவு கணக்குகளுக்கு சரியான குறிப்பேடுகள் தனிச் சிறப்புகளாக இருக்கின்றன.

எல்லாவற்றிலும் மேலாக சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற கணக்காளர் (Auditor) தணிக்கை செய்து வைத்துக் கொள்ளும் அளவுக்கு பணவிஷயத்தில் ப. தி. மு. க. நடந்து வருவது—தமிழ் நாட்டில் தி. மு. க. தோழர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவமாகும்.

பேச்சாளர்கள் — எழுத்தாளர்கள்—நடிகர்கள் எல்லோரையும் வளர்த்து வைத்திருக்கிறது: ப. தி. மு. க. பல கையெழுத்து ஏடுகளும் அதில் சிறந்த எழுத்தோவியங்களும் தோழர்கள் மத்தியில் நிலவுகின்றன, நல்ல படித்த தோழர்கள் பலர் கழக நிர்வாகத்தில் அங்கம் வகிக்க முன்வந்திருப்பதும், நடத்தி வருவதும் கழகத்தின் வளர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

ப. தி. மு. க.வின் வளர்ச்சியை தமிழக தி. மு. க. தலைமை நிலையம்—ஊன்றி கவனித்து தலைமை கழகத்தின் முக்கிய உறுப்பாக ப. தி. மு. க.வை பயன்படுத்த வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

இரா. சு. தங்கப்பழம் (16–12–54)

*

பம்பாய்
திருவள்ளுவர் கலா மன்றம்

15—1—55 இரவு 7–30 மணிக்கு திருவள்ளுவர் கலா மன்ற உறுப்பினர் கூட்டம் தாராவி ரகீம் சேட் சால் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் பந்தலில் மன்றத் தலைவர் எஸ். எம். இராசன் தலைமையில் நடைபெற்றது. ஏ. திராவிட சாம்ராஜ் இன்னிசைக்கு பின்னர் கடந்த கூட்ட நிகழ்ச்சிகள் செயலாளரால் வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. 9—3—55 புதனன்று நடைபெறவிருக்கும் 'பலிபீடம் நோக்கி' நாடக சம்பந்தமாக தோழர் உ. அ. செல்லையா உரைக்குப்பின் தாயகம் செல்லவிருந்த வி. எ. ஆறுமுகப்பெருமாள் அவர்கட்கு மன்றத்தின் சார்பாக 'மதி' என்ற நாடக நூலை (சி. பி. சி. எழுதியது) அன்பளிப்பாக கொடுத்து அன்னாரைப் பாராட்டி தோழர் இரா. வளர்மதி சொற்பெருக்காற்றினார். 8 செயற்குழு உறுப்பினர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கைத்தறி
ஆடையையே அணியுங்கள்

அறந்தாங்கி

22—1—55 மாலை 6 மணிக்கு தேரடித் திடலில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மா. சு. அடைக்கலம் தலைமை வகித்துப் பேசிய பிறகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் திராவிடத்தின் பிரிவினை குறித்தும் மற்றும் கழகக் கொள்கையை விளக்கியும் சுமார் 3 மணி நேரம் பேசினார்.

வரலாற்று ஓவியம்

அந்த நாட்டு நாடோடி!

அரசிளங்கோ

விழியில் வழிந்தோடும் கண்ணீர்த் துளிகளுக்குச் சொந்தம் கொண்டாடுபவன் சீமான் அல்ல; ஏழையாகத்தானிருப்பான். ஏழையின் அழுத கண்ணீரைக் கண்டு கலங்கியவர் உண்டு; அதுவற்ற வழியே இல்லையா என்று எண்ணியவரும் உண்டு; முன்வந்து முயற்சி வைத்து முயன்றவர்களும் உண்டு.

வக்கில்லாமல், வழிஉணராமல், வாழ வழியே தெரியாமல் ஓடாகி, வறுமை மிகுந்து, உயிர் உள்ளளவும், உழைத்து வந்து ஏழைகளைக் கண்டு, ஆசைமுகங் கொண்டு, 'உன் விழிநீரைத் துடைக்கிறேன்; உன் தொல்லை எனக்குத் தெரியும், உனக்கு வேண்டிய பல வசதிகளையும் செய்கிறேன். அதற்கு வேண்டிய திட்டத்தை இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறேன், உழையுங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று முதலைக் கண்ணீர் விட்டவர்கள், ஏமாற்றும் எத்தர்கள், சரசிகளைச் சுற்றிவரும் உல்லாசிகள், ஊர்ஊர், நாட்டுக்கு நாடு, இருந்தனர், இருந்தும் வந்தனர், இருந்து கொண்டும் வருகின்றனர், இன்றும் இப்பொழுதும்! உழைப்பவன் பெருக்கும் கண்ணீரை தடைபோட வேண்டும் என்று உதட்டில் மிதந்து வந்ததே தவிர தடுத்து நிறுத்த முயலவில்லை, முதலாளி வர்க்கம் முயன்றதும் கிடையாது, சரித்திரம் தரும் வரலாறு இது!

செல்வவான்களின் செருக்கும், அவர்களின் ஆட்டமும் பாட்டமும், கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் சில பல நன்மைகள் புரிந்திருக்கின்றன ஒரு சில நாடுகளில், எங்கெந்த நாட்டில் பணபலமும் பஞ்சைகளின் எண்ணிக்கையும் மிகுந்துள்ளதோ அந்த நாட்டில் ஊருக்கு உழைக்கும் ஒரு சில உத்தமர்கள் தோன்றி உள்ளனர், தோன்றியும் வருகின்றனர். எடுத்துக் காட்டு— இந்தோ சீனு!

ஏழையின் வியர்வையை வழித்தெறிய முன்வந்தான் ஒருவன். சீனத்தின் எல்லையிலேயுள்ள இந்தோ சீனம் அவனைத் தோற்றுவித்தது.

பல நாட்டில், ஏழையின் உணர்ச்சி ஆரம்ப காலத்திலேயே அழிக்கப்பட்டு விட்டதை நன்கு உணர்ந்தவன். சரியாகத் திட்டம் தீட்டப்படாமல், ஒழுங்கான கண்காணிப்பில்லாமல் வெறும் வளர்ச்சியை நம்பி இறங்கிய ஏழை மக்களின் புரட்சியை அடிச்சுவடு கூடத் தெரியாமல் ஆளும் ஆயுதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டுப் போனதைக் கண்டு அனுபவம் பெற்றவன்.

ஏழை வெறும் உணர்ச்சிக் கூடாக இருக்கக் கூடாது, வயிர உள்ளமும் சமய சந்தர்ப்பத்திற்கேற்ற போர்த் திறமையும் கொண்டு போராடவேண்டும்! புலி பதுங்குவது பின் தங்கிப் போகிறது என்பதற்காக அல்ல, வெற்றிக்கு வேண்டியவழியை அந்தச் சமயத்தில் அடைகிறது என்பதுதான் உண்மை என்பதையுணர்ந்தவன். பொருமும் ஏழை, பொழியும் கண்ணீர் பன்னீராக மாறவேண்டும், மாற்ற வேண்டும் என்று கருதி, திட்டம் தீட்டி வெற்றிப் பாதையை நோக்குகையில் ஆயிரமாயிரம் இளம் சிங்கப் பட்டாளங்கள் அஞ்சா நெஞ்சுடன் அணி வகுத்து நிற்பதைக் கண்டு புன்னகைப் பூத்தான், காளையரின் புதுமுகம் கண்டான், மகிழ்ந்தான்! மகிழ்வு உள்ளத்தில் நிறைய இளைஞர்கள் சுதந்தர கீதம் பாட மங்கையினர் வாழ்த்துப்பா முழங்க வெற்றிப் பாதையை நோக்கிப் பீடுநடை போட்டான் அந்த இளைஞன்—ஹோ சி-மின்!

மக்கள் மன்றத்தில் ஏறுநடை போட்ட அவனை ஒழித்துக்கட்ட முயன்றவர்களில் மதவாதிகளும் உண்டு, துரோகிகளும் உண்டு, அதிகார வெறி பிடித்த ஆளும்ஆதிக்கத்தினரும் உண்டு. அவனை அழித்து ஒழிக்க வேண்டுமென்று கூச்சல் போட்ட குறைமதியினர் குன்றிப் போயினர், குமுறலாயினர் அவனை முறியடிக்க முடியவில்லை என்ற தோல்வியில்.

"என்னுடையவன், என்னருமை தோழன், எந்நாட்டுக் காந்தி, என்னருமை மாமா" என்று செல்லப்பெயரிட்டு பள்ளுப்பாடுகின்றனர், வீரம் என்ற வார்த்தைக்கு புதியதொரு பொருள் தந்த வியட்நாமியர்கள், இன்று!

ஊர்ச்சுற்றியவன், பரதேசிப்பயல், எச்சல் தட்டைக் கழுவியவன், நாடோடிப்பயல், உன்னை ஒழித்து விடுகிறேன் பார் என்று உலகறிய பறைசாற்றிய ஏகாதிபத்திய வெறியர்களைக்கண்டு 'எங்கள் நாட்டுத்தலைவர், நாட்டுக்கு நாடு ஓடி அலைந்த நாடோடி தான், குடியரசைக்காட்டி புது வாழ்வைத்தந்த செம்மல் அவர் என்று வீரப்பண் பாடுகிறார்கள். இன்று வியட்நாமியர்கள்!

1945-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பூத்து மலர்ந்தது; வியட்நாம் குடியரசு; தலைவர் ஹோ-சி-மின். அவர் வானொலியில் மக்களுக்கு ஒலிபரப்புகையில் மக்கள் எவரும் சமம்; ஏற்றத் தாழ்வு இல்லை. விடுதலையும் வாழ்வும் இயற்கைக் கொடுத்த அழியாச் செல்வங்கள் பிரஞ்சு வெறியாட்சியில் தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாக அல்லல்பட்டோம். அவதியுற்றோம், தாங்கொணுத் தொல்லை; அடக்குமுறைச் சட்டம் எல்லாம் கண்டோம். நம் ஒற்றுமையைத் தகர்த்தனர். விடுதலை இயக்க வீரர்கள் வெட்டிச் சாய்த்தனர்.

இன்று நாம் விடுதலை பெற்று விட்டோம். இப்போது ஆடி சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்குருவி நாம்! நம் புதுக் குடியரசில் உழைப்பனுக்கு உணவு உண்டு. எல்லோரும் ஓர் நிறை! நம் குடியரசில் ஏற்றத்தாழ்வு எதுவுமிருக்காது என்று ஒலிபரப்பினுர் அந்த அறிஞர்!

1890-ம் ஆண்டு! அடிமை இந்தோ சீனத்தில் அன்னாம் ஒரு பகுதி! வின் (Yinh) அதிலமைந்த ஒரு மாகாணம் அதில் ஒரு கிராமம் அங்கு எளிய குடும்பத்தலைவன் ஒருவனை தந்தையாகக் கொண்டு பிறந்தான் ஹோ. கொஞ்சிக் கொஞ்சி பாட்டு ஊட்டித் தாலாட்டும் தாயும், முத்தம் தந்து மகிழும் தந்தையும் ஊட்டி ஆட்டி வரலாயினர்.

நாட்கள் திங்களுடன் ஓடி ஆடி, வளர்ந்து கொண்டிருந்தான் அவன். அன்னையும் தந்தையும் அவனை ஊட்டி வளர்ந்து வரும்போது நாட்டின் நிலைமையையும்; தோற்றத்தினையும் உணர்த்த இயற்கைஅன்னை மறக்கவே இல்லை. உற்சாகமும், நல்லறிவும் கொண்ட அவனை 'குடிஉரிமை உன்னுடைய பிறப்புரிமை என்று அதே அவனுக்குப் பாடம் சொல்லித் தந்தது.

துள்ளினும் களைக்காத பருவம்! இயற்கை கொடுத்த துடுக்கும் அடிமை நிலத்தின் நாட்டுப்பற்றும் சேர்ந்து நெஞ்சை உருக்காக மாற்றிக் கொண்டிருந்த நேரம்! அவனுக்கு ஆண்டு பதினெட்டு. வீட்டிலே தங்க விரும்பவில்லை பலமுறை கொண்ட நாடுகளைக் காண வேண்டும் கண்டு குடியோம்பலின் முறையை அறியவேண்டும் என்ற விருப்பம் அவன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து சத்தம் வைத்துக்கொண்டேயிருந்தது! பதினெட்டாம் ஆண்டில் பிரெஞ்சு கப்பலொன்றில் சாதாரண எடுபிடி ஆளாக சேர்ந்தான். கப்பல் செய்கோன் துறைமுகத்திலிருந்து அமெரிக்கா புறப்பட்டது. ஹோ அமெரிக்க மண்ணில் இறங்கினுன். பிறகு பிரிட்டனுக்குச் சென்றான்.

பிரிட்டனில் உணவுக்கடை ஒன்றில் வேலைக்காரனுக அமர்ந்தான். கிடைத்த வேலையும் கூலி வேலைதான். ஹோவின் வேலை உணவு அருந்திவிட்டுச் சென்றவர்களின் தட்டுகளை கழுவுவது. சிறிது காலம் அந்த வேலை அவனைக் கடத்திக் கொண்டு வந்தது பிரிட்டனில் இருந்த போது முதலாம் உலகச் சண்டை தொல்லைகளுக்கிடையே வாழந்து வந்தாலும் ஓய்வு கிடைக்கும்போது, பல முடிந்து போயிருந்த தருணம். பல முறைச் சொற்பொழிவுகளை கண்டு கேட்க அவன் தவறியதே இல்லை. சில கால வாழ்க்கை ஓட்டத்தில் அவனுக்கு பிரிட்டன் கசந்தது.

அவன் உள்ளத்தில் அடுத்து வட்டமிட்ட நாடு பிரான்ஸ்!

பாரிஸ்! சீமான்களின் சிருங்கார வனம். அழகியர்களின் ஆடல்பாடல்களுக்கு அது ஒரு சொர்க்கவாசல்!

கொஞ்சி மொழியினங்கள் சிப்பி போல் நகரும்போது, அழகைத் தமுக்கடித்துக் கொண்டிருக்கும் துல்லிய இழை ஆடைகள் காற்றையும் கால்களையும் அலசும்போது, வெட்டும் விழிகள் குறுகுறுத்துச் சுழலும் பொழுது, வாசம் வீசும் தென்றலை பரிமளக் கூந்தல் தொட்டுத் தடவும்போது, பைய விழிகள் அங்கு மிங்கும் காண, நாணம் கொண்டதுபோல் நடித்து துவளும் அந்தக் கோகிலங்களின் துடி இடை... அப்பப்ப! அம்மம்ம...சொல்ல முடியாது! ஆப்பிள் ஜூஸ், பழரசம்தான் பாரிஸ்!

சேல்விழி மங்கையர்களும் உல்லாசப் புரியினரும் சேர்ந்து சிந்து பாடிக் கொண்டிருந்த நேரம்தான், ப்ரான்ஸ் புரட்சிக்கு முன்னிருந்த நிலை.

இதுபோன்ற நிலையைக் காண கொடுத்து வைக்கவில்லை ஹோவுக்கு. ஏழை எரிமலையாகி, எத்தர்களை எரித்து எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் விளங்கிய நிலையில் பாரிஸ் சென்றான் ஹோ.

பாரிஸ் நகரத்தில் புகைப்பட நிலையம் ஒன்றில் வேலைக்கு அமர்ந்தான். புகைப்படம் எடுப்பவரின் கீழ் வேலை பார்த்து வந்தான், துணையாளாக! படம் எடுப்பது, திருத்துவது, மெருகிடுவது தான் இவன் செய்து வந்தவேலை. நிலையத்தின் உரிமையாளர் இவன் வேலைக்குக் கூலியாகக் கொடுத்து வந்தது ஒரு சில நாணயங்கள், பிராங்குகள் தான்!

அமெரிக்கா சென்ற நேரத்திலும், பிரிட்டனிலிருந்த காலத்திலும் பாரிஸில் அடிவைத்த போதும் ஹோ எந்த தொல்லையையும் கண்டு அஞ்சியவனல்ல அதற்காக அழுதவனுமல்ல! எதையும் தாங்கும் இதயம் அவனிடம் இருந்தது. ஓய்வுக் கிடைக்கும் போதெல்லாம் பிறந்த நாடு அவன் கண்முன் வரும், பிரெஞ்சு ஆதிக்கவெறியர்களின் ஈட்டி முனை முன்னுல் அல்லலுறும் ஆயிரக் கணக்கான அந்த நாட்டு உயிர்கள், வந்துவந்து ஓடும். தங்கம் உண்டு அவனது பூமியில். வளம் கொண்ட நாடு அவனது நாடு. கனிப்பொருள் கொண்ட நாடுதான். பிறந்த நாட்டின் பெருமையை நினைப்பான். அது பெற்று தன்னகத்தே குவித்து வைத்திருக்கும் செல்வங்களை நினைப்பான். உறங்குகையிலும் சிந்தனையிலும், ஓய்வு கிடைக்கும் ஒவ்வொரு வினாடியிலும். அவன் அழைத்து நாட்டைப்பற்றி உரைத்து அறிவைத் தரும் ஆசானுக இருந்தது. மறைந்த மனிதகுல மாணிக்கம் மார்க்ஸ்—அவரின் நூல்கள்.

அறிஞன் மார்க்ஸ் அவனுள்ளத்தை அறிவொளியால் நிரப்பினுன். மார்க்ஸ் தான் கடவுள் தந்தை, தாய் எல்லாம்!

கிடைக்கும் சமயங்களில் பிரஞ்சுப் புரட்சியைப் பற்றிப் படிக்கத் தவறவில்லை. பாஸ்டில் சிறை முதலாளி வர்க்கத்துக்கு முன்னுல் தூள் தூளாக்கப் பட்டதும் தெரியும்! பல நாட்டு வரலாறுகளைக் கண்டான் அது தந்த அனுபவங்களை உள்ளத்தில் கொண்டான! பல்வேறு மொழிகளை கற்றுத் தெளிய வேண்டும் என்ற நினைப்பை அவன் விட்டுவிடவில்லை பாரிஸிலிருந்தபோது அங்கு நிலவிய சூழ்நிலை நல்ல படிப்பினையைக் கொடுத்தது ஹோவுக்கு. அவனுடைய எதிர்கால திட்டத்திற்கு அது ஒரு வளர்ப்புத் தாயாக இருந்தது அந்த மண். ஹோ முப்பதாவது ஆண்டை எட்டிப் பிடித்தான்.

அவனின் அரசியல் படிப்பும் பாரிஸிலிருந்துதான் தொடங்கியது. அரசியல் பால பாடத்தை அந்த நாட்டு அபேதவாதக் கட்சியிலிருந்து தொடங்கினுன். அதனுடன் வேறுபாடு கொண்டதன் காரணமாக அதிலிருந்து விரைவிலே விலகி பிரஞ்சு நாட்டுப் பொதுவுடைமை இயக்கத்தில் சேர்ந்தான். அதே ஆண்டு அவன் நாட்டு அன்னுமியரின் சார்பாக மூன்ருவது அனைத்துலக காங்கிரசில் கலந்து கொண்டு இணையாக வாக்களித்தான், இதனிடையே பத்திரிகை ஆசிரியராக வேண்டும் என்ற எண்ணம் மனதில் வந்து கலந்தது. அந்த நாட்டு ஏடுகளில் சில, ஹோவின் சிலபல கட்டுரைகளைத் தாங்கி வெளியிட்டன.

1922-ம் ஆண்டு! முப்பத்திரண்டாவது வயதில் உருண்டு கொண்டிருந்தான் ஹோ. "Le Paria" என்ற இதழை சொந்தமாகக் தொடங்கினுன். இதில் தான் அவனுக்கிருந்த வேட்கையை பூரணமாகக் காணமுடிந்தது.

முதலாளித்துவம் ஹோவின் பேனு முனையில் விழிபிதுங்கியது ஹோவின் எழுத்துக்கள் சாட்டையடிபோல் விளங்கின, அவன் பாரிசில் இருந்த காலையில் இந்தோசீனத்திற்கு சுதந்திரம் வேண்டுமென்று முழங்கியதை அப்பொழுதிருந்த மூன்றுநாட்டு முப்பெருந் தலைவர்கள் Lioyd George, Wotro Wilson, George Clemenceau போன்றவர்கள் ஏரெடுத்தும் பார்க்கவில்லை, காதில் போட்டுக் கொள்ளவுமில்லை. அதைப்பற்றி கவனித்ததாகவும் தெரியவில்லை.

நாட்கள் பிறந்து வளர்ந்து கொண்டேயிருந்தன. புரட்சியின் தாயகம் சோவியத் மண்ணைக்காண அவா கொண்டான் ஹோ. ஹோவின் வியத்தகு அறிவின் திறனைக் கண்டு சோவியத் வியந்தது. பின் சோவியத் வருக! என்ற அழைப்பும்

விடுத்தது. சோவியத் மண்ணில் காலடி வைப்பதற்கு முன் நாட்டுக்கு நாடு சுற்றினன். பரோடி (Borodin)னுடன் சீனம் சென்ருன். மலேயாவில் கால்வைத்தான். அண்டைநாடான சயாமில் நுழைந்துமிருக்கிருன். ஹாங்காங் சென்று வர மறக்கவேயில்லை. இறுதியில் சோவியத் பூமி ஓ வைக் கண்டது. அந்த ஆண்டுதான் 1923. அங்கிருந்து ஹோ காண்டனுக்கு வந்தான். செயல்துறையில் இறங்கினன். 1926-ல் அன்னும் இளைஞர்களின் விடுதலை இயக்கம் கண்டான். பரோடினுடன் இருந்து கொண்டு காலனி எதிர்ப்பு அறிக்கைகளை வெளியிட்டான்.

ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாளன்று அன்னுமியரில் பலர் காண்டனில் ஒன்று கூடுவது வழக்கம், ஓரிடத்தில், உயிர் துறந்த அன்னுமிய வீர இளைஞனின் கல்லறை அது. அது காண விழா மாதிரி ஆயிரக் கணக்கில் வருவர், கூடுவர். கல்லறையைக் காணவரும் அன்னுமியருக்கு முன்னுல் அவன் வீரம் தெறிக்கும் சொற்பொழிவாற்றுவான்,

1927-ம் ஆண்டில் சியாங்காய் ஷேக் கோமின்டாங் கட்சிக்கும் விடுதலை வீரன் 'மா' வின் செங்கொடி இயக்கத்திற்கும் சச்சரவு சீனத்தில் உண்டாயிற்று.

இதுசமயம் சோவியத் மறுமுறையும் ஹோவை அழைத்தது. இம்முறை பரோடினுடன் ஹோ சோவியத் சென்ருன். ஹோ இல்லையென்ருலும் அவன் கண்ட காண்டன் இளைஞர் கழகம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு இருந்தது.

ஆண்டு 1930 அவனது ஆண்டில் ஓர் அற்புதத்தை நிகழத்தியது! வெறும் ஹோ தோழன் ஹோவாக மாறினன்! ஆம்! அன்றுதான் பொதுடமை இயக்கம் கண்டான், அதற்குக் கடைக்கால் நட்டான் அவ்வி()தலை இயக்க வீரன்.

பிரெஞ்சு ஆதிக்க புரியினர் மனித வேட்டையாடிய நேரங்களில் இந்த நேரமும் ஒன்று. சுதந்திர வீரர்களை சல்லடை போட்டு சலித்துக் கொண்டிருந்தது பிரெஞ்சு அரசாங்கம், பிரெஞ்சு அதிகார வெறியர்களின் கண்களிலிருந்து அவன் தப்ப முடியவில்லை. அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க வேலையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர், பிரிட்டிஷ் உதவிகொண்டு அவன் சிறை பிடிக்கப்பட்டான் ஒரு நாள்,

அழித்துவிடலாம், ஒழித்துவிடலாம் என்று சிந்து பாடிக்கொண்டிருந்த சீமான் வர்க்கம் 'ஓ' பிடிபட்டான், சிறையிலே அடைக்கப்பட்டான் என்று கேள்விப்பட்டபோது ஒழிந்தது உபத்திரவம் தங்கு தடையில்லாமல் சுரண்டலாம் என்றுகருதினன்—கருதியும் வந்தனர்!

இந்நிலையில் அவன் க்ஷயரோகத்தினுல் மிகவும் தொல்லைபட்டான். அவன் உடல் இந்நோயால் மெலிந்தது. ஹோ மெலிந்து வருவதைக் கண்டு பிரெஞ்சு அரசாங்கம் கண்ணின் மணிபோலக் காத்து வந்தது, அவன் மேல் கொண்ட அன்பின் காரணமாக அல்ல, அச்சத்தின் காரணமாக!

ஆண்டுகள் ஓடி மறைந்துக் கொண்டிருந்தன. 1936-வது ஆண்டு பிரான்சில் இடதுசாரியினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இந்தோ சீன மக்களுக்கு முற்றும் நம்பிக்கை பிறக்கவில்லை என்ருலும், ஓரளவுக்கு நம்பிக்கை இருந்தது. வெஞ்சிறையில் வாடிவதங்கிய வாலிபக் காளைகள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டனர். பொதுவுடமை விசும் ஏடுகளை எழுதலாம், படிக்கலாம், அச்சடிக்கலாம் என்ற உத்தரவைத் தந்தது அப் புதிய அரசாங்கம்.

புதிய அரசின் ஒவ்வொரு செயலும் வெறும் கண்துடைப்பு நாடகமென்று எண்ணினர் ஹோவும் மற்ற தலைவர்களும். சுதந்திரம் என்ற பேச்சே இல்லை, அளிக்கப்படவில்லை, இன்ருே, நாளையோ என்ற அளவில் மக்களின் முணக்குமுறல் இருந்து வந்தது.

தொழிற்சாலைகளில் அடிக்கடி வேலை நிறுத்தம் ஏற்பட்டது. தொழிற்சங்கம் காணவும், மேடையேறிப் பேசவும், கூட்டம் கூட்டும் உரிமையும் பேச்சளவிலே இருந்தது. ஒவ்வொரு வீரஇளைஞனும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருந்தான்.

1940-ம் ஆண்டு! ஜூன் திங்கள்! வெறி நாயைப்போல் வேட்டையாடிக் கொண்டு வந்த ஹிட்லரிடம் பிரான்ஸ் மண்டியிட்டு பணிந்தது! விச்சியின் ஆதரவு கொண்டு இந்தோ சீனத்தில் பட்டாளங்களுடன் படை எடுத்தனர் பாசிஸ ஜப்பானியர். படை எடுப்பைக் கண்டு ஒவ்வொரு இந்தோ சீன வீரனும் வெகுண்டான், உள்ளம் கொதித்தான். மூலை முடுக்குகள், பட்டிதொட்டிகள் எங்குமுள்ள சாதாரண ஒவ்வொரு மனிதனும் ஜப்பானிய பாசிஸத்தின் போக்கினை எண்ணத் தலைப்பட்டான். தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொருவரும் ஒரு முனையில் சேரலாயினர். நாட்டில் உறங்கிக் கிடந்த ஒரு சில மக்களையும் விழிக்கச் செய்து விட்டது பாசிஸ்டுகளின் படை எடுப்பு. இது வரையில் தனித்தனி முகாம் அமைத்துக் கொண்டிருந்த தேசியவாதிகள் குடியானவர் தொழிலாளர்கள் இயக்கங்கள் எல்லாம் ஒன்று சேர விழைந்தன; இணைந்தன, நாட்டின் நானுவித இயக்கங்களையும் ஒன்றுபடுத்தி விட்டது அந்தப் படை எடுப்பு, படையை அணிவகுத்துச் செல்லும் படைத்தலைவனுக ஆக்கப்பட்டான் ஓ. வறுமையில் உழன்றும் அவன் தலைமையில் வயிரம் பாய்ந்த கட்டையாக ஒவ்வொருவனும் விளங்கினன்.

நீண்ட காலமாக குமுறிக் கொண்டிருந்த இளைஞர்களின் உள்ளம் ஒருஅரிய வாய்ப்பைப் பெற்றது. 'சாவே வா! கழனியைக் கட்டாந் தரையாக்கும் பாசிஸ வெறியர்களை ஒழித்தே முடிப்பேன்' என்று சூளுரைத்து ஆயுதம் ஏந்தின, ஆயுதமும் வெடிகுண்டுகளும் வழங்கப்பட்டன. கொடுமையையே கண்டிருந்த உள்ளம் குமுறிற்று,வெடித்தது! கொரில்லாப் போர், எங்கும் எம்முனையும், காட்டில், வீட்டில், பட்டி தொட்டியில், எங்கும் எச்சந்தும், 'வியட்நாம்—அது எங்கள் குடியரசு' என்று முழக்கமிட்டனர் விடுதலைவிரும்பிகள்.

ஹோவினுல் கொண்டு, நின்று பேசினுல் தடியடி என்று இருந்த பிரெஞ்சு அரசாங்கம் ஜப்பானியரின் படைஎடுப்புக்குப்பின் இருந்த இடம் தெரியவில்லை.

'கொலை வாளினை எடடா!

மிகு கொடியோர் செயல் அறவே' என்று முழங்கினர். வியட்நாமியரின் வீரசுதந்திர கீதத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒவ்வொரு வியட்நாம் வீட்டிலும் வியட்நாமியரின் சுதந்திர கீதம் கேட்டது. சங்கென முழங்கியது!

ஜப்பான் உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டது. வியட்நாமியர் விடுதலைக் கொடியை நாட்டினர். 1945-ம் ஆண்டு! செப்டம்பர் திங்கள் அழகு மிகுந்த நாள் அவர்கட்கு! அன்று குருதி கொட்டி வீரப் போரிட்டு மடிந்த ஆயிரமாயிரம் வியட்நாமியரின் நினைவு அலைகளின் இரத்தச் சுவட்டில் 'வியட்நாம் குடியரசு' மலர்ந்தது, பரிணமித்தது. சுரண்டல் கொடிசுட்டு எரிக்கப்பட்டது, ஐந்து கோண நட்சத்திரம் பொறிக்கப்பட்ட கொடி உச்சி மீது ஏறியது. அண்டம் கண்டு அதிசயித்தது; இந்த அற்புத நிகழ்ச்சியை!

இந்த அதிசயத்தைக் கண்டு உலகப் பெரு மக்கள் விந்தை மிகு கொண்டார்கள், ஏகாதிபத்தியவாதியினர் மிரண்டு செய்வது இன்னது என்று அறியாது திகைத்தனர். பிரஞ்சு ஆதிக்க வெறியர்களுக்கு உதறல் கண்டது. இந்தோ சீனத்தை அபினுலும் மற்றவற்ருலும் சுரண்டி வந்த சீமான்களால் இப்போது சுதந்திர கீதம் பாட முடியவில்லை.

நாட்கள் பிறந்து உருமாறிக் கொண்டிருந்தன. பிரஞ்சு ஆதிக்க புரியினருக்கு காலனி ஆசை இன்னும் விடவில்லை. இவர்களுக்கு ஒத்தாசை புரிய டாலர் ஏகாதிபத்தியம் உதவிக்கு வந்தது. தங்களின் பாரும், பணபலமும் போய் விட்டதே என்று பரதவித்தவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது இது. வளங் கொண்ட நாட்டின் பொன் கொழிக்கும் நிலங்கள் பணஅரசர்களின் முன்வந்து ஆட்டம் போட்டன.

வியட்நாம் குடியரசு பூத்த அதே ஆண்டு பிரெஞ்சியர் வியட்நாமியரைத் தாக்கினர். அமெரிக்கரின் ஆள் அம்பு விமான வெடிகுண்டு பிரஞ்சிந்தியருக்கு உதவியாக வந்தன. பிரிட்டனும் பிரஞ்சியருக்கு பக்கபலமாக நின்றது. ஆதிக்க வெறியினர் பிரஞ்சு பக்கம் நின்று கொக்கரித்தனர். தன்னுட்டுத் தோழன் ஒவ்வொருவன் முன்னும் நின்று வாரீர் களம் காண்போம் என்று உரிமைக் குரல் கொடுத்தார்

ஹோ! பேரே புதுமை! உள்ளத்திலிருந்து வரும் வார்த்தைகளே புதுமை! பேச்சிலே தனி வகைப் புதுமை! மக்களை இயக்க அடிப்படையில் ஒன்று திரட்டி குடியானவரும் தொழிலாளரும் அணிவகுத்துச் செல்லும் முறையே புதுமையல்லவா!

'நாம் பிறந்தது நல்ல மண், வீரம் வளர்க்கும் மண். சுதந்திரச் சிட்டுப் போல பறக்க பிறந்தோம் நாம். சுதந்திரம்! அதுதான் நமது இதய கீதம்! இதுவரை சிந்தியது குருதியல்ல, இனி மேல் கொட்டப்போவதுதான் குருதி வீரம்—அதற்குப்புது அகராதி காண விழையுங்கள்' என்று போர் முழக்கமிட்டார் ஹோ! இம்முழக்கம் சந்து. பொந்தெல்லாம் சென்று முழங்கின, முழக்கமிட்டன.

இன்று! ஹோவின் தலைமையில் வீர வியட்நாமியர் சென்ற எட்டாண்டு காலமாக போர் வெறியருடன், இரத்தம் சிந்திக் கொண்டிருப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. உலகமே அதைக் கண்டு வியட்நாமியரின் வீரச்செயலைக் கண்டு அதிசயிக்கிறது; 'அற்புதம் அற்புதம்' என்று கூறி 'வெற்றி வெற்றி பெருக' என்ற ஆசியையும் தருகிறது.

தீன்-பின்-பூ என்ற கோட்டையின் வீழ்ச்சி; தங்களின் அந்திய காலத்துச் சாவு மணி என்பதை பிரெஞ்சியர் உணர்ந்த பின் தான் வழிக்கு வந்தனர். சமாதானம் விழைந்தனர். வரலாற்றில், பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய அந்தப் போரில் பிரெஞ்சியர் மட்டும் பன்னிரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உயிரை இழந்தனர்;

வியட்நாம் மண் இரண்டரைக்கோடி மக்களைக்கொண்டது. அது தென்னுட்டுத்தலைவனுன ஓவை ஏற்றுக் கொண்டு அவர் வழி சென்று கொண்டிருக்கிறது.

ஓ ஒரு தீவிர அரசியல்வாதி. சமுதாயவாதியும் கூட, நல்ல ஆராய்ச்சித் திறம் கொண்டவர் ஒரு காரியத்தை நாடி அதைச் செய்யுமுன் அதன் முன் பின் விளையும் லாப நட்டங்களை நன்கு உணர்ந்து செயலாற்றும் திறமை கொண்டவர்,

ஒவ்வொரு சாதாரண மனிதனும் வியட்நாமை தாங்கிக் கொண்டிருக்கும் தூண் என்று கருதுகிருர். ஒவ்வொருவருடனும் பேசுகிருர். சேர்ந்து வாழ்கிருர். குதிரைமேல் ஏறிக்கொண்டு குடிநலம் பேணுகிருர். 'குடிநலம் என்னலம்' என்று கருதுவதால்தான் ஹோ 'எங்கள் நாட்டுக் காந்தி' என்று புகழ் பாடி ஏத்துகின்றனர் வியட்நாமியர். 1946-ம் ஆண்டு குடியரசுப் பூத்த வேளையில் இவரிடம் இருந்தது ஒரே ஒரு கோட்டுதான் என்ருல் பார்த்துக் கொள்ளுங்கள்! தொழிலாளர், குடியானவர்களுடன் அன்பு ததும்பப் பேசுவார். அவர்களுடனே தூங்குவார், எந்த நேரமும் அவர் எண்ணத்தில் தொழிலாளரும் குடியானவரும் வந்து வந்து போவார். நண்பர்கள் ஏதாவது கேட்டால் 'நான் எங்கு தூங்கினுல் என்ன, எங்கிருந்தால் என்ன, இந்நாட்டு மன்னர்கள்' என்பார் சிரிப்பு தவழ. யாரும் அவரை எளிதில் போய் பார்க்கலாம் பல மணி நேரம் பலநாள் காத்திருந்து இடுப்பொடிய வேண்டியதில்லை.

ஒருமுறை ஓர் பிரெஞ்சு இதழின் பிரெஞ்சு பொறுப்பாளர் ஒருவர் ஓ வைக்கண்டு பேட்டி காண வேண்டும் என்ற விருப்பம் எற்பட்டது, அவரைப் பார்த்து உங்களின் பிறந்த நாட்டுப்பிறப்புரிமையில் எவ்வளவுசொந்தம் கொண்டிருக்கிறீர்களோ, அதையேதான் என் மக்களும் விரும்புகிருர்கள், என்ருர் ஓ அந்தப் பிரஞ்சியருக்கு ஒன்றும் பேச முடியாமற் போய் விட்டது.

வீர வியட்நாமியர் இன்று வெற்றி நடையுடன் நின்று கொண்டிருக்கின்றனர். அணிவகுத்துச் செல்லும் ஓவுக்குப் பின்னுல் கத்தோலிக்கர்கள் உண்டு! மக்கள் குடியரசுவாதிகள் உண்டு! அபேதவாதிகள் (Socialists) உண்டு! குடியானவர் தொழிலாளிகள் உண்டு! பொதுவுடமைத் தோழர்களும் உண்டு! இன்னும் எல்லோரும் ஒன்று நின்று ஒரே விடுதலை இயக்கமாகி ஒன்ருகிவிட்டனர் ஒன்ருகி நிற்கின்றனர். கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லா இயக்கத்தினராலும் போற்றி வாழ்த்தப்படுகிருர் இன்றைய வியட்நாம் தலைவர் ஓ!

ஓ— அவன் ஒரு நாடோடி, அறுதை, ஊர் சுற்றியவன். எச்சல் தட்டை கழுவியவன், மக்களை ஏமாற்றுகிறவன் என்று சில ஆண்டுகளுக்கு முன் பிரச்சாரம் செய்த பிரஞ்சியர்களும் பிரிட்டனியரும் அமெரிக்கரும் இன்று ஓவைப்பற்றிப் பேச பயப்படுகின்றனர். பணபலம் குறைந்த பிரிட்டன் பதுமை வேடம் போடுகிறது!

எந்த நாடோடியைக கண்டு அமெரிக்கரும் பிரஞ்சியரும் வசை புராணம் படித்தார்களோ அதே நாடோடி இன்றைய வியட்நாம் மணணின் இரண்டரைக் கோடி மக்களின் தலைவன் என்பதைக் கண்டு உலகம் வியக்கிறது, அதிசயிக்கிறது!

●

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினுல் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40-நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னுருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினுலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை சாப்பிடக்கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன்	1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரு,	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ஸைஸ் மில் தெரு, சென்னை—1

பெரியாரும் தி. மு. கழகமும்

ஆவேசக்காரர்களுக்கு நிர்வாகத் தலைவரின் அறிவுரை?

23–1–55–ம் நாளன்று திருச்சியில் தி. க. மத்திய நிர்வாகக்குழு கூடிய போது — அக்கூட்டத்தில் இரண்டு பேருக்கு ஆவேசம் வந்து விட்டதாம்! கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மற்ற உறுப்பினர்களும் பெரியாரும் கூட இந்த ஆவேச அவலட்சணத்தைக்கண்டு கோபப் பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆவேசத்திற்குக் காரணம் என்ன தெரியுமோ?

நாடகச் சட்ட எதிர்ப்பை திராவிடர் கழகமே தனித்து நின்று நடத்தவேண்டும். வேறு யாரையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது அதிலும் கண்ணீர் துளி கட்சிக்காரர்களை அறவே சேர்த்துக் கொள்ளக்கூடாது. (இப்படிப் பேசிய ஆவேசக்காரர்களில் ஒருவரான நீடாமங்கலத் தி. க. தோழருக்கு அச்சமயம் கண்கள் சிவந்துவிட்டதாம்! பற்களை நரநரவென்று கடித்துக்கொண்டாராம்! அடுத்த நிமிடம் அவர் கண்களிலிருந்தும் கண்ணீர்த்துளிகள் சிந்தினவாம்! (இது நான் தரும் ரிப்போர்ட் அல்ல—'விடுதலை' (29—1—55) இதழில் காட்சியளிக்கும் காதொடிந்த ஊசி தந்த தகவல்)

இப்படியாக அந்த ஆவேசக்காரர் வெளுவெளுன்னு வெளுத்துக்கட்டினாராம்! அத்துடன் நிறுத்தி விட்டாரா! இல்லை தனது வேலையை மீண்டும் தொடர்ந்து வெளுக்க ஆரம்பித்துவிட்டாராம்!

நடிகவேள் ராதா கூட அந்த கண்ணீர்த்துளிகளுடன் சில சமயங்களில் தொடர்பு வைத்துக் கொள்கிறார்! அவர் மட்டுமா நமது நிர்வாகத் தலைவரும் அப்படி யிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இது உண்மையாயின் வருந்துகிறேன். கண்ணீர்த்துளிகளிடம் நாம் நெருங்கவே கூடாது. உஷாராயிருக்க வேண்டும் என்று சிந்துபாடி தமது சீட்டில் (Seat) அமர்ந்தாராம்!

இதைத் தொடர்ந்து காதொடிந்த ஊசி மனிதரும் ஒப்பாரி வைத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்த ஒப்பாரியை தி. க. மத்திய நிர்வாக உறுப்பினர்கள் பொருட்படுத்த வில்லையாம்! இந்த மனிதருக்கு எப்போது பார்த்தாலும் இதே தொழிலாகப் போய் விட்டது என்று முணுமுணுத்தார்களாம்!

இந்தப்படியாக—இவ்விரு ஆவேசக்காரர்களும் தங்களது முக்கிய திட்டத்தைக் கமிட்டியில் கூறியவுடனே—நிர்வாகத் தலைவரான தோழர் டி. பி. வேதாசலனார் அவர்கள் எழுந்திருந்து பேசினாராம்—கேளுங்கள்!

அய்யா அவர்கள் வீற்றுள்ள இந்தக் கூட்டத்தில் சிலவற்றை ஒளிவு மறைவின்றி சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் என்னைக் கொண்டுதந்து விட்டிருக்கிறார்கள், எனக்கு முன்பு பேசிய நீடாமங்கலத் தோழரும், இன்னொருவரும். நீங்கள் கண்ணீர்த்துளி கட்சிக்காரர்கள் என்று சொல்லும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் எனக்கு யாதொரு தொடர்பும் இல்லை. அக்கரையும் கிடையாது. அதற்காக அவர்களைத் தூற்றித் திரிபவனும் அல்ல. பெரியாரின் வாழ்நாள்வரை அவரது தலைமையில் அபார நம்பிக்கை வைத்திருப்பவன் நான், ஏன் எனது வாழ்நாள் வரைகூட பெரியாரின் தலைமையை மனதார நம்பியிருக்கிறேன். ஆனாலும் இந்த நம்பிக்கையை காட்டிக் கொள்வதென்பது கண்ணீர்த்துளிக் கட்சிக்காரர்களையும் மற்றவர்களையும் தாக்கிப் பேசுவதுதான் என்று கருதுபவர்களின் பட்டியலில் நான் என்னும் சேரமுடியாது.

நண்பர், ராதா அவர்கள் திருச்சியிலே ராமாயண நாடகம் நடத்த முன் வந்தார். அதை காண்ட்ராக்ட் எடுத்தவர் நமது திராவிட கழகத்தைச் சார்ந்தவரே. வசூல் நிறைய ஆகவேண்டும் அதற்கு என்ன வழி என்பதை யோசித்து முடிவாக என்னிடம் வந்தனர். தி. மு. க. தோழர்களில் ஒருவரை ஒரு நாளைக்குத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொள்ளலாம் என்ற பேச்சும் எழுந்தது சரிஐந்தாறுநாட்கள்கழித்து வாருங்கள் — யோசித்துச் சொல்லுகிறேன் என்றேன்.

அதுபோலவே காண்டிராக்ட் எடுத்த நமது தி க. தோழரும் வந்தார் சரி தி.மு க தோழர்களில்......அவர்களை ஒரு நாளைக்குத் தலைமை வகிக்க அழைக்கலாம் என்று கூறினேன். அவர் யார் தெரியுமா! அவர் தான் தோழர் ஈ. வி. கே. சம்பத். இதற்கு யான் யாரிடத்தில் ஒப்புதல் பெற்றிருக்கிறேன் தெரியுமா! நமது தந்தை மதிப்பிற்குரிய தலைவர் பெரியார் அவர்களிடம் ஒப்புதல் பெற்றே கூறினேன். இதற்கு ஆதாரம் வேண்டுமா இதோ கடிதங்களையும் கொண்டுவருகிறேன்......என்று கூறினாராம்!

உடனே பெரியார் அவர்கள் குறுக்கிட்டு "இருக்கட்டுங்கள் வேதாச்சலம் இப்போ என்ன அவசரம் அதற்கு" என்று கூறிவிட்டு மேலால் நடவடிக்கைகளைத் தொடர்ந்தாராம்!

நிர்வாகத் தலைவர் வேதாச்சலம் அவர்களது பேச்சினைக் கேட்டவுடன் இரு ஆவேசக்காரர்களின் முகங்கள் எள்ளு பொறி கொள்ளு பொறி போல காட்சியளித்ததாம்!

நிர்வாகக் கமிட்டி கூட்டத்திற்கு வந்திருந்த மற்ற உறுப்பினர்களும், இந்த காதொடிந்த ஆசாமி இவ்வளவு பேசுகிறாரே—சென்னையில் ராதா அவர்கள் ராமாயண நாடகம் நடத்தியசமயம் பெரியாரும் தலைமை தாங்கினார்—அடுத்து அண்ணாதுரையும் தலைமை தாங்கினார்—பிறகு இந்த மனிதரும் தலைமை தாங்கினார். அப்போது எங்கே போயிற்று புத்தி! என்றும்,

இந்த மனிதரால் அண்ணாதுரை தலைமை வகிப்பதை தடுக்க முடியாவிட்டாலும், அந்த கண்ணீர்த்துளி தலைமை வகித்ததினால்—நான் தலைமை வகிக்க வரமாட்டேன் என்று ராதாவிடம் சொல்லியிருக்க வேண்டாமா! சொன்னாரா—இல்லையே—அதற்கு மாறாக கடைசி நாடகத்திலும் தலைமை வகித்து பேசியிருக்கிறாரே—அப்போது எங்கே போச்சுங்காணும் இந்த மனிதருக்கு ரோஷம்! சும்மா இங்கே நம்முன் வேஷம் போடுகிறாரே—இந்த மாதிரி ஆட்களின் பேச்சைக் கேட்டுத்தான் நம்மவர்களில் சிலபேர் அண்ணாதுரை கட்சிக்காரர்களுடன் மோதிக்கொள்கிறார்கள்—பைத்தியக்காரன்கள என்று முணுமுணுத்துப் பேசினராம்!

மற்றும்சிலர், என்னதானிருந்தாலும் நமது பெரியாருக்கு தி. மு. கழகத்தவர்களிடம் தனிப்பட்ட பற்றும் பாசமும் இருக்கத்தான் செய்கிறது. ஏதோ கோபத்தில் சில நேரங்களில் திட்டிவிடுகிறாரே தவிர மற்றபடி அவர்கள் மீது அன்புதானிருக்கிறது, என்று ரகசியமாகப் பேசிக் கொண்டனராம்!

இதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த மற்றும் சில உறுப்பினர்கள், பெரியார் சரியாகவோ தப்பாகவோ அவர்களைத் திட்டலாம் அதற்கு உரிமையுண்டு, இந்த காதொடிந்த மனிதன் எப்போது பார்த்தாலும் நமக்கும் அவர்களுக்கும் சிண்டு முடிச்சி விட்டு—இவர் ஏதோ பெரியாரின் அத்யந்த பக்தரைப்போல பசப்புகிறாரே என்று பேசிக் கொண்டிருக்கையில் உணவு தயாராகி விட்டது எல்லோரும் வாருங்கள் என்று அன்பழைப்பு விடுக்கப்பட்டவுடனே அனைவரும் சென்று விட்டனராம்!

—நக்கீரன்

ஆதிக்க வெறியர்களுக்கு டாக்டர். லோகியா சூடு!

ஆந்திராவில் சுற்றுப்பயணம் செய்து வரும் டாக்டர் மனோகர் லோகியா 30.1.55.ம் நாள் கர்நூலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியதாவது:

உலகின் தற்கால அமைப்பில் ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தியாவிலுள்ள பார்ப்பனர்களது நிலையை வகித்து வருகிறார்கள். இந்தியா தனது அந்நிய நாட்டு முறையால் உலகில் இணையற்ற நிலையை வகித்து வருவதாக நினைப்பது தவறு. உலகில் 4 வெள்ளைய வல்லரசுகள்தான் ஆதிக்கம் வகிக்கின்றன. இந்தியா தாழ்த்தப்பட்டவர்கள் நிலையில் இருக்கிறது. இந்தியாவின் சர்வதேச முறையை வல்லரசுகள் போற்றுவர் என்று கூறுவது பைத்தியக்காரத்தனமாகும்.

ஆந்திராவில் கம்யூனிஸ்டுகளுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு மிடையில்தான் உண்மையில் லடாய் நடக்கிறது. இரு கட்சியினரும் பேய்களைப் போன்றவர்கள். அவர்களில் எவர் அதிகார பதவிக்கு வந்தாலும் ராஜ்ய மக்கள் லட்சியம் செய்யாமலிருப்பதைத் தடுக்கவே எனது கட்சி முயலுகிறது. எந்த சர்க்கார் வந்தாலும் அவர்கள் மக்கள் நலத்திற்கு விரோதமாகச் செல்லுகையில் அவர்களது காதை பிடித்துத் திருகி அவர்களது கடமையைச் செய்யும்படி செய்வதற்காக எங்களை 3-வது சக்தியாக வைக்க வேண்டும். அதற்காக எங்களது 30 அல்லது 40 அபேட்சகர்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். கம்யூனிஸ்டுகளும் சரி. காங்கிரஸ்காரர்களும் சரி ஒருவருக்கொருவர் பிறரது தற்காலிக வெற்றியை வரவேற்பர். ஏனெனில் இது 2 பேருக்கும் அனுகூலமானது. இவ்விரு கோஷ்டிகளும் பிறரது தவறுகளையும் பிறர் செய்யும் காரியங்களையும் எடுத்துக் காட்டி தங்களைப் பலப்படுத்திக்கொள்ள முயலுகின்றனர்.

சுந்தரய்யா ஜவஹரை துரோகி என்றழைத்தாலும் சரி ஜவஹர் சுந்தரய்யாவை அம்மாதிரி அழைத்தாலும் சரி இருவரும் சிநேகபாவமான முறையில் தான் வெளிக்கு இம்மாதிரி கடிந்து கொள்கிறார்கள். உலகெங்கும் கம்யூனிஸத்தை விரும்பும் நேரு இந்தியாவில் அதனை விரும்பாதது முன்னுக்குப்பின் முரணாய் இருக்கிறது. இந்த மாதிரி நேருவின் உலகக் கொள்கையை விரும்பும் கம்யூனிஸ்டுகள் அவரது உள்நாட்டு முறையை விரும்பாதிருப்பது முன்னுக்குப்பின் முரணாக இல்லையா!

ரஷ்யா—இந்தியா அந்நிய நாட்டு முறைகள் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருக்கும்வரை கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் எந்தப் போராட்டத்திற்கும் ஏற்பாடு செய்யமாட்டார்கள். அவர்களுக்கு சொந்த நாட்டு மனோபாவமே கிடையாது.

தற்போதுள்ள உலக நிலையில் அணுகுண்டு, ஜலவாயு குண்டு உள்ளவர்களே சக்தி வாய்ந்தவர்கள். இந்த குண்டுகள் ரஷ்யாவும் அமெரிக்காவும் பெற்றுள்ள ஐஸ்வரியத்தை பாதுகாக்கும் படையெடுத்த நாகங்கள். நேருவின் சேர்ந்து வாழும் தத்துவத்தை ரஷ்யா தனக்கு உகந்ததாக இருக்கும் வரைதான் ஏற்றுக்கொள்ளும்.

டாட்டாக்களையும் பிர்லாக்களையும் சோஷலிஸ்ட் சமுதாய முறையை ஏற்கும்படி தூண்ட முடியாவிட்டால் காங்கிரஸ் அதனை இந்தியாவில் எப்படி ஏற்படுத்த முடியும்? காங்கிரசின் கைத்தொழில் முறை இதற்கு ஏற்றதாக இல்லை. பெரிய கைத்தொழிற்சாலைகளால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமே உண்டாகிறது.

7 ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்தும் விவசாயிகள் தொழிலாளர் நிலை மோசமடைந்துவிட்டது. ரிக்ஷா இழுப்பவர்கள், விபசாரிகள், பிச்சைக்காரர்களது தொழில்தான் பெருகி இருக்கிறது. காங்கிரஸ் சர்க்காரின் கைத்தொழில் முறையில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது.

தாணுபிள்ளை மந்திரிசபையை பி. சோ. கட்சி மந்திரி சபையாக நான் கருதவில்லை. அது ஒழிந்து போக வேண்டுமென்றே விரும்புகிறேன். தி. கொ. ராஜ்ய அசெம்பிளியிலுள்ள காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்டுகளும், பி. சோக்களும் மக்கள் நலத்திலோ அல்லது கொள்கையிலோ சம்பந்தப்படாத குடும்பச் சண்டையில் ஈடுபட்டிருப்பது போலவும் அதிகார வேட்கையில் ஈடுபட்டிருப்பது போலவும் தோன்றுகிறது. இந்த 3 கட்சியினரும் ஒழிய வேண்டுமென்று விரும்புகிறேன். மக்களை சட்ட அரசாங்கத்தை ஆதரிப்பதில் காங்கிரஸ் கட்சிக்குக் கஷ்டமில்லை. ஆனால் சில கமிட்டிகளில் 3 ஸ்தானத்திற்கு பதில் 2 ஸ்தானமே கிடைத்ததும் அது சர்க்காருக்கு அளித்த ஆதரவை வாபஸ் பெறுகிறது. காங்கிரஸ் கட்சியின் தேசாபிமானம் இதுதான்

R. லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்–1

பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை–1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
" 103–1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கேள்வி? பதில்

—அஞ்சா நெஞ்சன்—

‘குருசாமி தாசன்’ கேள்வி கேட்கிறார்!

●

கே: எங்கள் அறிஞர், தளபதி குருசாமியாரின் பழைய போக்கை எடுத்து திராவிடன் இதழில் எழுதியிருப்பதைக் கண்டேன். 1949-ம் ஆண்டு செப்டம்பருக்கு முன்பிருந்த குருசாமியார் வேறு. அந்த குருசாமியார் இல்லை. இப்போது இருப்பவர் புதிய குருசாமியார். இவர் புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கம். அப்படியாலும் வயதில் சிறுவரோ என்று கேட்காதீர்கள். கிழவர்தான் அவர். இதை உணர்ந்தாவது இனி எங்கள் அறிஞரை குறை கூறாமல் போற்றுங்கள். இதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள். கண்டிப்பாக பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ரா. குருசாமிதாசன்
வடக்குராச வீதி—தஞ்சை

ப: அன்புள்ள தோழரே—தங்கள் கேள்விக்கு கண்டிப்பாக பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று மிரட்டியிருக்கிறீர் சொல்லாவிட்டால் என்ன செய்வீரோ? எனினும் அந்த வீண் வம்புக்கு நான் தயாராயில்லை. எனவே பதில் கூறுகிறேன்—விளக்கம் பெறுவீராக. உங்கள் தளபதி குருசாமியார் எனக்கும் நண்பர் தான். (ஓகோ மறந்துவிட்டேன் கண்ணீர்த்துளி கட்சிக்காரன் என்னை நண்பன் எனறு எப்படி எழுதலாம். இதனால் எனது மானமே போய்விட்டது. எனவே இதுபற்றி திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டியில் ஓர் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும், சென்னை திராவிடர் கழகக் கமிட்டி கூட்டத்திலும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி கண்ணீர்த்துளி கட்சிக்கு அனுப்ப வேண்டும் என்று உங்கள் தளபதி குருசாமியார் ஆத்திரப்படக்கூடும். ஆதலால் யான் நண்பர் என்று குறிப்பிட்டிருப்பதை முன்னாள் நண்பர் எனக் கொள்க.)

அவரை வேணுமென்றே குறை கூறவேண்டுமென்பது எனது எண்ணமல்ல. அவ்வளவு அபார சாமர்த்தியமும் எனக்குக் கிடையாது. அதற்கு நேரமும் இல்லை. எனவேஇங்கிலேயிலும் யான்குறை கூறும் அவசியம் ஏற்படுகிறதென்றால் அதற்குக் காரணம் என்ன என்பதைத் தாங்களே சிந்தித்து தெளிவு பெறவும். இதற்கு நீங்கள் தயாராயில்லையெனில் இந்த விஷயம் எப்படியோ போகட்டும்.

ஆனால் உங்கள் கேள்வியில் தொக்கியிருக்கிறதே! புடம்போட்டது—தங்கம்—சிங்கம் என்ற வார்த்தைகளையெல்லாம் அடுக்கியிருக்கிறீரே, அதுபற்றி மாத்திரம் எனது பதிலைக் கூறுகிறேன்.

உங்கள் தளபதி புடம்போடப்பட்ட சரக்கோ அல்லது புதுப் பிறவியோ இதையெல்லாம் யான் அறியேன். நீங்கள்தான் இத்தனையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள் உமது கேள்வியிலே. எனவே பொதுவாக நடை, முறையில் உள்ள சிலவற்றை மட்டும் எனது பதில் என்ற முறையில் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

பித்தனை யிருக்கிறதே பித்தளை—அதை எத்தனைதரம் தான் துலக்கி வைத்தாலும் பொன்னாக முடியுமா!

பெரிய பெரிய இரும்பு தூண்களின் வளைவுகளையும் சரி செய்து விடலாம். ஆனல் நாயின் வாலை நிமிர்த்த முடியுமா?

இதையெல்லாம் உங்கள் தளபதிக்காக கூறுகிறேன் என்று கருதாதீர்கள். அவரைத்தான் புடம் போட்டு விட்டீர்களே! பொதுவாக நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியினை நினைவு படுத்தினேன்.

உங்கள் கேள்வியின் இறுதியில் உங்கள் தளபதியாரைப் போற்றுங்கள் என்று எனக்கு உபதேசம் செய்திருக்கிறீர். மிகவும் நல்லது. அதற்கும் குறிப்பாக பதில் கூறுகிறேன் கேளும். என்னைப் போற்றுங்கள் என இன்னொருவர் தப்பட்டையடிக்க முடியுமா? அவ்விதம் செய்தால் பிறர் என்ன நினைப்பார்கள்? இவர்களுக்கு “மேல்மாடி” காலியா அல்லது இருதயக் கோளாறு என்றுதானே நகைப்பர். ஆகவே யாராயினும் சரி ஒருவர் போற்றப்பட வேண்டுமானல் அந்த அளவுக்கு அந்த மனிதரிடம் பண்பும் வளர வேண்டும். அதுதான் சிறந்தவழி. மனமிருந்தால் மார்க்கமுண்டு.

இதை யான் உங்கள் தளபதிக்காக சொல்லுகிறேன் என்று முடிவு கட்டி விடாதீர்கள். அவரைத்தான் புடம்போட்டுவிட்டீர்களே!

தோழரே, உங்கள் கேள்விக்கு நீங்கள் உத்திரவிட்டபடியே கண்டிப்பாக பதில் கூறிவிட்டேன் போதுமா?

போரூரணியில் பிறப்பு

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளரும் மறுமலர்ச்சிக் கவிஞருமான தோழர் கே. எஸ். எம். கலாநேசன் அவர்களின் துணைவி தோழியர் **ஜெமீலா அம்மையார்** 21—1—55 வெள்ளியன்று பேரரூரணியிலே ஒரு பெண் மகவைப் பெற்றார். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக ‘திராவிடன்’ வளர்ச்சிக்கு ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். நன்றி—நிர்வாகி

திராவிடன்

சந்தா விவரம்

●

ஆண்டு சந்தா ...	ரூ.	8	0	0
ஆறுமாதம் ...	ரூ.	4	0	0
வெளிநாடு				
ஆண்டு சந்தா ...	ரூ.	9	0	0
ஆறு மாதம் ..	ரூ.	4	8	0
தனிப்பிரதி ...	ரூ	0	3	0
,, வெளிநாடு ,,		0	3	6

தாலியும்—தமிழரும்

சி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் இடித்துரை

28—1—55 வெள்ளியன்று தி. மு. கழக உறுப்பினரும், மலேயா சென்று வந்தவருமான தோழர் **சுப. அடைக்கலம்** அவர்களுக்கும் தோழிய செண்பகவல்லி அம்மையாருக்கும், தோழர் சி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் முன்னிலையில் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. அதுசமயம் சி. ஆ. பெ. அவர்கள் பண்டைய திருமணத்திற்கும் தற்கால சீர்திருத்தத் திருமணத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றுகையில்: மிக பண்டைய காலத்தில் ‘தாலி’ கட்டும்முறை இருந்ததில்லை என்றும், மகளிர் மன்றலுக்கு முன்பே இருந்து அணிந்துவந்த சிலம்பையே திருமணத்தின்போது கழட்டு விழாவாக நடத்தி மணமுடிப்பார்கள் என்றும் அதற்குச் சற்று பிற்காலத்தில் வீரத்திற்கறிகுறியாக ‘புலிப்பல் தாலி’ ஏற்பட்டதென்றும் ஆரியர்கள் புகுந்த பின் அவர்களுக்கு புலிப்பல் கொண்டு தாலி கட்டும்முறை ஒவ்வாததாக, கஷ்டமாக [வீரமில்லாததினால்] இருந்ததினால் ‘புலிப்பல் தாலி’ என்னும் சொல்லை தங்களுக்கு எற்றவாறு ‘பொற்தாலி’ என்னும் சொல்லாக திரித்துக் கூறி மாற்றி விட்டனர் என்றுகூறி முடித்தார்.

வாழ்த்துக்களும், பரிசுகளும் அனுப்பிய உள்நாட்டு வெளிநாட்டுத் தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. வரப்பெற்றோம், நன்றி (நிர்வாகி)

சவுண்டிகள் திருவிளை...தொடர்ச்சி

கிறது.

திரு-கொச்சித் தமிழ்ப் பகுதிகளில் அறப்போர் நடத்திய தமிழர்கள் மீது பட்டம் தாணு சர்க்கார் பிரயோகித்த அடக்கு முறை கொடுமைகள், இந்தியத் துணை கண்டத்தின் அரசியல் வரலாறு அழியாத வரையில் எவருமே மறைக்க முடியாது. சுருங்கக் கூற வேண்டுமானால் திருவாங்கூரில் திவானாகயிருந்த சர். சி. பி. ராமசாமி அய்யரின் அடக்கு முறையையும் மிஞ்சுமளவுக்கு மக்களின் உரிமையை பட்டம் தாணு சர்க்கார் சீர்குலையச் செய்துள்ளனர்.

தி. மு. கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசு கழகம், திரு. த. நா. காங்கிரஸ் உள்ளிட்ட எல்லா கட்சிகளுமே பட்டம் சர்க்காரின் பதட்டத்தையும், ஜனநாயகப் பண்பற்ற ஆட்சி முறையையும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

அதிலும் கம்யூனிஸ்ட் கட்சியினர், பட்டம் சர்க்காரைக் கண்டித்ததோடு மட்டுமல்லாமல் முதலமைச்சர் தாணு அவர்களின் தனிப்பட்ட போக்கினையும், **அதற்கு துணை செய்யும் காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தின்** மட்டரகச் செயலையும், சித்தரித்து இதைவிட கீழ்த்தரமான அரசியல் நடவடிக்கைகள் வேறெதுவும் இருக்கமுடியாதென்றும் ஓயாமல் பேசினர்—ஏடுகளில் தீட்டினர்.

ஆனால் இன்று என்ன காண்கிறோம். அரசியல் பேரத்தில், பட்டம்தாணு சர்க்காருக்கும் காங்கிரஸ் மேலிடத்தாருக்கும் தகராறு ஏற்படவேஇதுவரை நடைபெற்ற கொடுமைகளுக்குச் ‘சபாஷ்’ பட்டம் கொடுத்து, துணையும் புரிந்து வந்த காங்கிரஸ், அதிலிருந்து ஒதுங்கி நின்று—மக்களிடமும் தான் படிதாண்டா பத்தினி என காட்டிக் கொள்ளவும் பட்டம் தாணு சர்க்காரை எதிர்க்கவும் முனைந்திருக்கிறது.

இந்த சமயத்தில் எதிர்க் கட்சியினர் செய்யவேண்டியது என்ன? தாங்களாக ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற முடிந்தால் அத்தகு செயல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும். இல்லையெனில் காங்கிரஸ்—பட்டம்தாணு சர்க்கார் ஆகியவைகளின் தகிடுதத்தங்களை மக்களுக்கு திட்டவட்டமாக எடுத்துக் காட்டும் வகையில், அரசியல் நிகழ்ச்சிகளை உண்டாக்கி யிருக்க வேண்டும் அல்லவா?

ஆனல், திரு—கொச்சியில் இன்று நடப்பதென்ன? கொடுமையே உருவெடுத்து தலை விரித்தாடிய அந்த பட்டம் தாணு சர்க்காருடன் **கம்யூனிஸ்ட் கட்சி** பேரம் பேசிக்கொண்டு அச்சர்க்காருக்குக் குனிந்து கொடுத்து வருகிறது! “அவல கெட்டான் குடியன் எனக்குப் போடு இரண்டு” என்று கூறினானும் ஒரு மகா யோக்கியன்! அவனது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தையும் மிஞ்சும் அளவுக்குத்தானே திரு-கொச்சி கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் காட்சியளிக்கின்றன

அரசியல் பண்பினையும். தென்னாட்டின் நலனையும் அறவே மறந்து தங்களது ஆதிக்கத்திற்கு மட்டுமே நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் வடநாட்டு பிடிப்பில் சிக்கிக் கொண்டுள்ள காங்கிரசோ கம்யூனிஸ்டோ அல்லது வேறெந்த கட்சியாயினும் அரசியல் துறையில் இவ்வித தன்மானமற்ற சம்பவங்களைத்தான் காண முடியும் என்பதற்கு இதைவிட சான்று வேறென்ன வேண்டும் என்று கேட்கிறோம்.

தென்னாட்டுப் பிரச்னையில், “அகில இந்தியா” என்ற அடிப்படையில் இயங்கும் எந்தக் கட்சியாயினும் இவ்வித பித்தலாட்டங்களைத்தானே கையாண்டு வருகிறது. லேபிலில்தான் மாற்றமே தவிர சரக்கு மட்டும் மகாமட்டமான ஒரே குப்பைதான்!

பத்துப் பனிரெண்டு பேரைக் கொண்ட கட்சியினராகிய பட்டம் தாணுப்பிள்ளை, ஆட்சிபீடத்தில் அமருவதற்கு வழிவகுத்துக் கொடுத்த காங்கிரசின் விசித்திர சம்பவங்களிலிருந்து — இன்று அந்த சர்க்காரின் கால்களுக்கு குனிந்து முத்தம்கொடுக்கும் கம்யூனிஸ்ட்டுகளின் விபரீதப் போக்கு வரை நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்ப்போமேயானல், அரசியலில் இந்த இரு சாரரைவிட நான் எந்த வகையில் யோக்கியதையை இழந்துவிட்டேன் என்று பட்டம் தாணுப்பிள்ளை கேட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இத் திருவிளையாடல்களில் மூழ்கியுள்ள சவுண்டிகள்தான் திராவிட நாட்டுப் பிரிவினை தீதானதென்றும், குறுகிய நோக்கமென்றும் கூப்பாடு போடுகின்றனர்! வெட்கம்! வெட்கம்!

கழகச் செய்திகள்

தொழிலாளர்களின் ஊதியத்தில் கை வைக்காதே!

கோவை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் தீர்மானம்

26—1—55 காலை 9 மணிக்கு தியாகராயர் படிப்பகத்தில் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் ஆலோசனைக் கூட்டம் தோழர் எஸ். எ. இராசமாணிக்கம் முன்னிலையில் தோழர் வீ. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது அதுசமயம் தோழர்கள் எஸ். எ. இராசமாணிக்கம், ப. நாராயணன், தம்பிதுரை, இராசநாயகம், சு. கண்ணன், இரா. சுந்தரம் ஆகியோர் தொழிற்சங்க எதிர்கால வேலைகள், நமக்குள் உள்ள கட்டுப்பாடுகள் குறித்து தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தனர். 26—1—55-ந் தேதி மாலை இராமனுதபுரம் அன்னமார் கோவில் திடலில் தோழர் பி. அய்யாசாமி தலைமையின் கீழ் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராசமாணிக்கம், ப. நாராயணன், இரா. சுந்தரம் ஆகியோர் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் அவசியத்தை எடுத்துரைத்தனர். கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற கூட்டம் முடிவுற்றது,

மூக்கூட்டு குழு சிபாரிசுகளை அமல் நடத்த வேண்டுமென கோரி அடையாள வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களின் சம்பளத்தில் 8 நாள் ஊதியத்தை பிடித்தம் செய்வதோடு சர்வீசை வெட்டுவதெனவும் ஆலைமுதலாளிகள் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருப்பதை வன்மையாக கண்டிப்பதுடன் அதை வாபஸ் பெறறுக்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது

இலங்கை

திராவிட இயக்கத்தைச் சார்ந்தவரும், அந்நிலே முன்னணிப் பேச்சாளருமான, கா. அமீது அவர்கள் தாயகம் செல்ல இருப்பதை முன்னிட்டு அன்னாருக்கு ஒரு பிரிவுபசாரக்கூட்டம் முக்தமிழ் மன்ற சார்பில் 27-1-55 இரவு 7-மணியளவில் தோழர் எல். தர்மதாசன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் மா. முத்துவிநாயகம், என் சிலன், என் ரொசாரி, ச. இராசு, ஜெ சோமசுந்தரம், கோ, பாலன், தி. இளங்கதிர் ஆகியோர் அவர் ஆற்றிப் பணியினை பாராட்டிப் பேசினர். மன்றத்தின் சார்பில் 'சூழ்நிலை' என்னும் புத்தகம் அன்பளிக்கப்பட்டது.

கொள்ளுப்பெட்டி கிளை

மேற்படி தி. மு. கிளைக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 21-1-55 இரவு 9-மணிக்கு கழக பணிமனையில், தோழர் வை. மு. அழகேசன் தலைமையில் நடைபெற்றது. கழக வளர்ச்சிக்கான வழிவகைகளைப்பற்றி நிர்வாகிகள் முடிவு செய்தனர்.

கழக ஆண்டுவிழாவை ஏப்ரல் மாதம் 3-வது வாரத்தில் நடத்துவதெனவும் அதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டன.

மலாட்

மலாட் தமிழர் முன்னேற்றச் சங்க முதலாவது பேரவை 26—1—55 காலை 11 மணிக்கு மாதுபய்யா மாங்தோப்பில் நடைபெற்றது. சங்கத் தலைவர் எம். சுவாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். கௌரவச் செயலாளர் எஸ். பி, பிலிப் சாமுவேல் வரவேற்புரையாற்றினர். துணைச்செயலாளர் உ. மு. முகம்மது ஹூசைன் ஆண்டறிக்கையையும் 31—12—54 முடிவுள்ள வரவுசெலவு கணக்குகளையும் சமர்ப்பித்தார்.

பின் தோழர்கள் சந்திரசேகர பாவலர், பாவலர் கே. எம். பீர்முகம்மது, எம். சங்கர், ந. சிவபாண்டியன் ஆகியவர்கள் தமிழர் பண்பாடுகள் குறித்துப் பேசினர்கள். தோழர்கள் எம். சுவாமி தலைவராகவும், எஸ். மாயாண்டி, டபிள்யூ. என், ரத்னம், எஸ். கணபதி ஆகியவர்களை துணைத்தலைவர்களாகவும் எஸ், பிலிப், ஆ. சோலையப்பன். ஆகியவர்கள் செயலாளர்களாகவும் கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பம்பாய்

26-1-55 6-மணிக்கு குடியரசு நிலையத்தில் தோழர் எஸ் எஸ். சண்முகநாதன் இன்னிசையுடன் தோழர் எஸ். சிவகுருநாதன் தலைமையில். கடந்த ஆண்டு தி மு. கழக நிர்வாகிகளைப் பாராட்டும் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் கடந்த ஆண்டு நிர்வாகிகளைப் பாராட்டி தோழர்களான டி. வி. துரை, எல்,என், செழியன், உ. அ. செல்லையா, எஸ். வள்ளிநாயகம் ஆகியோர் பேசினர். கடந்த ஆண்டு செயலாளர் எஸ். தியாகராசன். துணைச்செயலாளர் இரா. ம. சண்முகராசன், 'முயற்சி' ஆசிரியர் த. மு. பொற்கோ, படிப்பக நிர்வாகிகள் புத்தரசு. கோ. இ செல்லையா, பொருளாளர் பி எஸ். செல்லையா ஆகியோருக்கு கழகத்தின் சார்பாக தலைவரால் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து தோழர் எஸ். தியாகராசன் கழகத்தின் எதிர்காலப் பணியைப்பற்றி உணர்ச்சி மிக்கதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். தோழர்கள் இரா. ம. சண்முகராசன், த. மு. பொற்கோ ஆகியோரும் பாராட்டிற்கு நன்றி தெரிவித்துப் பேசினர், தலைவர் முடிவுரைக்குப்பின் துணை செயலாளர் சா. தர்மராசன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

கோடைகானல்

16-1-55-ம் நாள் கே. சி. எஸ். மைதானத்தில் திராவிடர் திருநாள் தி. மு. கழக சார்பில் தோழர் ஆர். தம்புசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது கே. எம், எம். மேத்தா பொங்கல்விழா கொண்டாட வேண்டிய அவசியம்பற்றியும், உழைப்போரை போற்றி உற்சாகமூட்டும் விழா தான் தமிழர் திருநாள் என்றும், பொதுவுடைமையினரின் பொல்லாத பேச்சுகளுக்கும், நாத்திகர்கள் யார் என்பது பற்றியும் தி. மு. கவினர் ஒன்றே குலம்—ஒருவனே தேவன் என்ற கொள்கை கொண்டவர்கள் என்றும், திராவிடநாடு ஏன்? என்பதைப்பற்றியும் விளக்கினர். பின்னர் மதுரை எஸ். முத்து இலங்கை இந்தியரைப்பற்றி பேசியபின் 750-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

அய்யகோ குடியரசே!

—புத்தரசு, பம்பாய்—

சுதந்திரநாள் சுதந்திரநாள் என்றே வாய்சொல்
 சொன்னார்கள்! கூட்டங்கள் போட்டார்! வானில்
மிதக்கவிட்டார் தனிக்கொடியை "வாழ்க எங்கள்
 பெருநாடென்" றதிர்வெடிகள் வெடித்தார்! ஆட்சி
விதந்தெரிந்த தலைவரெல்லாம் 'செய்தி' சொன்னார்
 வீரமக்காள்! எழிமையினை நாம் மேற்கொண்டால்
இதம் பெறும்நம் வறுமைசேர் நாடென்"றார் பின்
 இசையரங்கில் கலந்துகொள்ள இலண்டன் சென்றார்

குடிகளெலாம் துடித்தார்கள்; "அய்யோ பஞ்சம்
 கொல்கிறதே" என்றார்கள்; ஆட்சியாளர்
"படுமோசம் செய்ததுபார் மழைதான்! அந்தோ!
 பதைபதைப்போர் துயர்நீக்க ஏழை நாட்டால்
முடியலையே" எனஇறங்கிச் சொன்னார்; ஆனால்
 மூந்நூறு நாடுகளில் தூதர் கூட்டம்
அடுக்கடுக்காய் அமைக்கின்றார்! வீண்பகட்டுக்(கு)
 அளிக்கின்றார் பலகோடி வாரி வாரி.

"குடியரசே! மக்களெல்லாம் மன்னர்! வீழ்க
 கொடுமையெல்லாம்! காந்தியண்ணல் பாதை தன்னில்
அடிதொடர்வோம்" என முழங்க "ஆமாம்" என்றார்
 அங்கிருந்த கதர்காரர் தலைவர் பேச்சைப்
படத்தோடும் ஏடுகளிற் கண்டார்! மக்கள்,
 "பளபளக்கும் தலைவீரே! எம்வயிற்றுக்
கொடுமைதவிர்" எனஎழுந்தார் அகிம்சை பேசும்
 குடியாட்சிப் போலீசார் அவரைச் சுட்டார்!

சுதந்திரமோ! ஈண்டுள்ள மக்கட்(கு) இல்லை!
 சுகந்தேடி முழங்கிட்டால் சுடுகின்றாரே!
துதிபாடி அன்னார்பின் செல்லாவிட்டால்
 துச்சமெனத் தூற்றுகின்றார் இதுதான் மக்காள்
சுதந்திரமோ? கதர்காரர் கனத்து வாழ,
 சுகங்காணு நாமெல்லாம் சோர்ந்து வாழ்வதோ
சுதந்திரம்? அன்றன்று! இந்நாட்டில் 'சு' போச்சு
 தந்திரந்தான் நிலைத்ததிங்கு அய்யகோ குடியரசே!

தேனாறு—தொடர்ச்சி

உணர்ச்சி வெள்ளமான கவிதைச் செல்வங்களின் அருகேகூட அந்தக் காசம் அணுக முடியவில்லை—காசம் மட்டுமல்ல வேறு எந்தக் கடும்நாசம் சூழ்ந்தாலும் அந்தச் செல்வங்களை அரிக்கவே முடியாது.

ஏறத்தாழ ஐந்தாண்டுகள்தான் (1815-20) கீட்ஸ் கவிதை இயற்ற முடிந்தது அந்தக் குறுகிய காலத்தில் தான் அவன் கவிதைகள் புனைந்தான் என்றாலும் அவைஆயிரமாயிரம் ஆண்டுகள்—ஏன்! என்றுமே அறியாத அமரத்வம் பொருந்திய கவிதைகளாக அமைந்து விட்டன.

அவன் படைப்புகளிலே அழகும், கருத்தும் ஒருங்கே அரசோச்சின. வார்த்தைகளுக்காகக் கருத்தையோ, கருத்திற்காக சொற்களையோ சிதைத்து அவன் குழப்பவில்லை, கொலை செய்யவும் இல்லை.

இயற்கையாகவே அவனோடு கருத்துக்களும் வார்த்தைகளும் ஒன்றிப் போயிருந்தன. கருத்தை எண்ணியவுடன் அழகான சொற்களோடு கவிதை வெளிப்படும்! புதியமுறையிலே அழகிய பாணியிலே அவன் அள்ளி அள்ளித் தெளித்தான். அந்த நீரை ஆவலோடு பருகி கவிதைச் செடியும் வளர்ந்தது.

அவன் வாழ்ந்த காலத்திலே அவனுக்குப் புகழ் தராவிடினும், மறைந்தபின் 'அவள் (புகழ்) இச்சித்தாள் தானாகவே உங்களைப் பின்தொடர்வாள்' என்ற அவன் கருத்துப்படியே புகழைத் தேக்கிய 'புகழும்' (Fame) இனிமையும் உணர்ச்சியும் பொங்கித் ததும்பும் எழில் மிக்க 'குயிற்பாட்டும்' (Nightingale) 'பூனைப்பாட்டு'ம் (Sonnet to a cat) அவன் மறைவை நினைத்ததும் நம்மைத் துக்கத்திலே ஆழ்த்தித் தவிக்கவிடும் 'துக்'கமும் (Melancholy) அவன் கவிதைச் சிறப்பை அவனிக்கு அறைகூவும் அருமையான கவிதைகளாகும்.

நாட்டில் ஒரு பரபரப்பை உண்டாக்கி தெய்வத்தை, மனிதன் காதலிப்பதா? என்ற கண்டனக் கணைகளுக்கு ஆளான அழகுத் தேவதையைக் கண்டு காதலித்த இளைஞன் எண்டிமியான் (Endymion) என்ற அற்புதமான கவிதையும் 'இசபேல்லா' [Isbella] என்ற கோரமான காதற் கதையும் இன்றும் ஆங்கில இலக்கியத்திலே தனிப்பெரும் இடத்தைப் பெற்றுள்ளன.

'கருணையற்ற கட்டழகி' (La Belle Dame Sans Merci), 'தூக்கமும் கவிதையும்' (Sleep and Poetry) 'மனிதப் பருவங்கள்' (The Human Sea-sons) மற்றும் எண்ணற்ற கவிதைக் களஞ்சியங்கள் கீட்ஸ் மறைந்தாலும் நாங்கள் மறையமாட்டோம் என்று நானிலத்திற்கு பறைசாற்றி நற்பெருமை கொண்டு ஒளிர்கின்றன.

கீட்ஸைப் பற்றி புரட்சிக் கவிஞன் ஷெல்லி 'மேல் காற்றில்' கூறியதைப் போல அவன் கவிதை என்றுமே வற்றாத— சுவை குன்றாத—திகட்டாத தேனாறு!

சிறுமதுரை

தி. நா. சோ. அண்ணாமலை(தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர்) அவர்கள் பொங்கல் தினத்தன்று தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் தாய்மார்களுக்கும் சுமார் 40 சேலைகளும் 40 வேட்டிகளும் அன்பளிப்பாக எடுத்துக் கொடுத்தார்.

அத்திப்பாளையம்

16—1—1955 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் பொங்கல் விழா தோழர் கோ. வேங்கடசாமி தலைமையில் நடைபெற்றது. பொங்கல்விழா கொண்டாடுவதின் அவசியத்தைப்பற்றி பலர் பேசினர்.

புரட்சிப் பெண்

இலங்கையிலுள்ள குறுகுல பீடசாலை நிதிக்காக பொங்கலன்று இந்நாடகம் நடத்தப்பட்டது. இலங்கை மக்களுக்கு நாடகத் துறையில் ஆர்வம் எழுந்ததற்கு முக்கிய காரணங்களில் ஒன்று கலைஞர் கருணாநிதியின் தூக்குமேடை நாடகம் ஆகும். அந்த ஆர்வத்தின் பிரதிபலிப்பாக எத்தனையோ நாடகங்கள் நடத்தப்பட்டன.

வருவாயினை எதிர்பார்த்து நடத்தினர் பலர். ஏதேனும் நிதிக்காக நடத்திய நாடகங்களும் உண்டு. இரண்டாவது வரிசையில் நடைபெற்றதுதான் "புரட்சிப் பெண்".

கதை வசனம்: 'கிளர்ச்சி' ஆசிரியர் இரா. கு. தங்கப்பழம் அவர்களால் தீட்டப்பட்டது இந்தக் கதையில் ஆச்சாரியாரின் அரசியல் ஸ்டண்ட்கள் பல கண்முன் நினைவிற்கு வருகிறது. இந்த கருத்துக்களை நோக்கத்திற் குகந்தாற்போல் அலங்கரித்திருக்கிறார் ஆசிரியர். குறிப்பாக ஓரிடத்தில்...பதவி என்னடா? அதுதான் குற்றுலம் போனாலும் கூடவே வருகிறது! என்று தனக்கே உரித்தான நகைச்சுவை பாணியில் தீட்டியுள்ளார். கதையில் புரட்சிக் கருத்துக்களை நிரம்ப தெளித்துள்ளார் ஆசிரியர். அது மட்டுமல்லாமல் இது ஓர் மர்மக் கதையாகவும் காட்சியளிக்கிறது. சுருங்கக் கூறவேண்டுமானால் 'புரட்சிப் பெண்' திருவிடத்தின் மறுமலர்ச்சியை எடுத்துக்காட்டும் ஒரு கருத்துக்கூடம் என்றே சொல்லலாம்.

பாடல்கள்: அனைத்தும் தற்சமயம் வெளியாகிய திரைப் படங்களில் உள்ள மெட்டுக்களிலேயே அமைத்துள்ளார்கள். பொதுவாக அனைத்தும் காதுக்கினிமையாக இருந்தன.

நடிகர்களும், நடிகைகளும் தங்களுக்கு கொடுத்த பாகத்தை நன்குணர்ந்து நடித்துள்ளார்கள். காட்டிய நடிகையாக தோன்றிய கனகம்மாவின் நடிப்பும், நடனமும், பாடலும், பிரமாதம் பிரமாதம் என்று எல்லோரும் வியக்கும்படியாய் யிருந்தது. சோகக் கட்டத்தில் தோழியரின் நடிப்பு, நடிப்புக் கலையின் உச்சிநிலையை எட்டிப் பிடித்தது. கன்னுவி பாகமேற்று நடித்தவரின் நடிப்பு உண்மையிலேயே கன்னுவிதான். மிக 'ஓவர்'.

டைரக்ஷன்:—மாஸ்டர் கே. ராசேந்திரன் மிகக் கச்சிதமாக தமது திறமையைக் காட்டியது

நாடகத்தின் வெற்றிக்கு ஓர் காரணமாகும். நாடக முடிவில் அதில் நடித்த முத்தமிழ் மன்ற செயற்குழு உறுப்பினர் எம். எஸ். மணி அவர்களுக்கு 'அறிஞர் அண்ணாதுரை' என்ற புத்தகம் பரிசளிக்கப்பட்டது.

வி. எஸ். முருகன், இலங்கை

*

பவனிவரத் துடிக்கும் படங்கள்

ஸன்ரைஸ் பிக்சர்ஸ் நல்லவன், மாடர்ன் தியேட்டர்ஸ், கதாநாயகி, ரோகிணி பிலிம்ஸ் ஏழையின் ஆஸ்தி ஆகிய திரைப்படங்கள் இம் மாத இறுதிக்குள் நாடெங்கும் பவனிவரப்போகிறதாம்!

*

அதிவிரைவில் எதிர்பாருங்கள்!

'அமலன்'

தரும் அமர இலக்கியம்!

கலைச்சாரத்திலே அமலன் தொடுக்கும் மூன்றாவது பொன் மலர்!

'செஞ்சியின் செல்வன்'

(நாடகம்)

தேசிங்கு ராஜன் கதை

விவரங்கட்கு :

13. A. வண்ணாரப்பாளையம் : கடலூர் N. T.

இலங்கையில் டி. கே. எஸ். சகோதரர்கள்

இலங்கையில் தொடர்ந்து நாடகங்களை நடத்தி வரும் டி. கே. எஸ். சகோதரர்களின் கலைத்திறனை இலங்கைப் பிரதமர் கொத்தலவாலா மிகவும் பாராட்டிப் பேசியிருக்கிறார். சென்ற 15-ந் தேதி யன்று நடைபெற்ற நாடகத்திற்கு தலைமை வகித்துப் பரிசுகளும் வழங்கினார்.

*

நடிகவேள் ராதா

நடிகவேள் எம். ஆர். ராதா தமது குழுவினருடன் தென்னாட்டில் சுற்றுப் பயணம் செய்து நாடகங்களை நடத்தி வருகிறார். 5—2—55-ம் நாள் பாலக்காட்டில் 'லட்சுமிகாந்தன்' என்ற நாடகத்தையும் 7—2—55-ம் நாள் திருச்சியில், 11-2-55-ம் நாள் புதுவையில் தூக்குமேடை என்ற நாடகத்தையும் நடத்துவார்.

*

சதாரத்தில் நடிப்புப் புலவர்!

மேனகா படத்தைத் தயாரித்த கஸ்தூரி பிலிம்ஸ் வி. எி. சுப்பராமன் அவர்கள், அந்நாளில் நாடக மேடையிலே மிகப் பிரசித்தி பெற்றிருந்த சதாரம் என்ற கதையை திரைப்படமாக்க முனைந்திருக்கிறாராம்! இப்படத்தில் நடிக்க நடிப்புப்புலவர் கே ஆர். ராமசாமி அவர்களை ஒப்பந்தம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

*

பாலு சகோதரர்களுக்குப் பாராட்டு

சென்னை தேனாம்பேட்டை பொருட்காட்சியில், ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களால் உருவாக்கப்பட்ட காந்தி கலைக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. த. நா. கா. க. தலைவர் கக்கன் இக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள திருவள்ளுவர், காந்தியடிகள் போன்ற பெரியார்களின் வண்ணச் சித்திரங்களைத் தீட்டிய ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களின் திறமையையும் இதன் மூலம் மக்களுக்கு அவர்கள் போதிக்கும் நற்பண்பினையும் பாராட்டிப் பேசியதுடன் இதுபோன்ற கலைஞர்களுக்கு அரசியலார் கட்டாயம் ஆதரவளிக்க வேண்டுவது இன்றியமையாததாகும் எனக் குறிப்பிட்டார்.

ஆதித்தன் குதிக்கிறார்!

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், திராவிடர் கழகம், தி. மு. கழகம் ஆகிய கட்சிகள் தங்கள் நோக்கங்களை விளக்கி அதற்கேற்ப போராட்டங்களில் இறங்குவோம் என்று கூறி வருவதை, நண்பர் ஆதித்தன் அவர்கள் தமது தின இதழிலே, இதோ அவர்கள் போராட்டத்தில் குதிக்கிறார்கள்; இவர்கள் குதிக்க யிருக்கிறார்கள் என்று சித்தரித்து வருகிறாரல்லவா? இதைக் கண்ணுற்றுவரும் தோழர்களில்பலர் ஆதித்தன் எந்தப் போராட்டத்தில் குதிக்கப் போகிறாரோ என எதிர்பார்த்திருந்தார்களாம்! எனவே அந்த எதிர்பார்த்துள்ள ஆவலை நிறைவேற்றும் வகையில், நண்பர் ஆதித்தன் அவர்கள் 27-2-55-ம் நாள் நடைபெறப் போகும் சென்னை சட்டசபை (சாத்தான்குளம் தொகுதி) தேர்தல் போராட்டத்தில் குதித்திருக்கிறார்! இவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பாக தோழர் செல்வராஜ், பி. சோ. சார்பில் மங்களா பொன்னம்பலம் மற்றும் இரு அபேட்சகர்களும் தேர்தல் களத்தில் இறங்கி யிருக்கின்றனராம்!

நன்றி

திராவிடர் திருநாளன்று வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் என் உளங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன் சி. மாசிலாமணி
(திராவிடன், பொன்னி, தீச்சுடர், சொல்லம்பு விற்பனையாளர்—சிவபுரா)

(வி)

கம்யூனிஸ்டுகளுக்கு புத்திவந்ததாம்

30-1-55-ம் நாளன்று திருவனந்தபுரத்தில் தி. கொ. பி. சோ. கட்சியின் நிர்வாகக் கமிட்டியின் ரகசியக் கூட்டம் முதலமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளையின் தலைமையில் மூன்று மணிநேரம் நடைபெற்றது. அதுசமயம் அக்கட்சியின் பொதுக் காரியதரிசியான **தோழர். வர்க்கீஸ்** குறிப்பிட்டதாவது :—

மற்ற எந்தக் கட்சியின் ஆதரவைப் பெருவதற்காக மந்திரிசபை தனது கட்சியின் பாதையிலிருந்து சிறிதும் தவறி நடக்காது. புனப்பரா—வயலாறு கைதிகளை மந்திரி சபை விடுதலை செய்தது—எந்த ராஜிய கட்சியையும் தாஜா செய்வதற்காக அல்ல. பத்து மாதங்களுக்கு முன்பே இவர்களை சில நிபந்தனைகளின் பேரில் விடுதலை செய்ய வேண்டும் என்று பி. சோ. கட்சி முடிவு செய்திருக்கிறது.

சமீப காலமாக கம்யூனிஸ்டுகள் அவர்களின் பழைய போக்கினை மறந்து தி. கொ. சர்க்காரிடம் நேசப்பான்மை காட்டி ஒத்துழைக்கவும் முன்வந்துள்ளனர். கம்யூனிஸ்டுகளின் இந்த மனப்பான்மை இப்படியே நீடித்து வருமென்று எதிர்பார்க்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

தி. கொ. அரசியலில் திடீர் பல்டியடித்துள்ள கம்யூனிஸ்டுகளைத் தோழர் வர்க்கீஸ் இப்படியா குனியவைத்துக் குட்டுவது? பரிதாபம்! பரிதாபம்!

முதல் பக்கத்—தொடர்ச்சி

நான் இந்த தென்னிந்திய வைதீக சாமியாருக்கு எச்சரிக்கை செய்துகூறுகிறேன்.

உலகத்திலே விஞ்ஞானத் துறையிலே, கலைத் துறையிலே அறிவியல் துறையிலே ஏற்பட்டுள்ள முற்போக்கான கருத்துக்களைவிட புத்தநெறி அதிகமான அறிவியல் கொள்கைகளைக் கொண்டு முற்போக்குற்றுள்ளது என்பதையும், அவருடைய மனச்சாட்சியற்ற பேச்சுக்கள் எத்தகைய பலனுமளிக்காது என்பதையும், முற்போக்கான புத்தநெறி தனது பிறப்பகத்திலே மறுமலர்ச்சியடைவதற்குப் பாதகமான குறுகிய கொள்கைகளிலிருந்தும் கேடான நடவடிக்கைகளிலிருந்தும் தொலைவில் எட்டி நிற்க வேண்டு மென்பதையும் இந்த இந்து சாமியார் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்து மதத்திலே உள்ள தடைகளை தமிழர்கள் ஒருக்காலும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

"இந்தியாவிலிருந்து கடல் கடந்த நாடுகளுக்கு விரட்டப்பட்ட புத்தநெறி, பொய்ப் பிரசாரங்கள் மூலம் மறுபடியும் தமிழ் நாட்டிலே மறுமர்ச்சியடையச் செய்யப்பட்டாலும் அது அனுமதிக்கப்படக் கூடியதல்ல. புத்தநெறியில் அன்பு தாய்மைப் பாசமும் கிடையாது" என்று, கோயபல்ஸ் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள குன்றக்குடி மடதம்பிரான்களில் மூத்தவரான இந்த சாமியார் உண்மை உணர்ந்து தெளிவுபெறட்டும்.

'திராவிடன்', அச்சிடுபவர். வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம் 18. சின்னையன் லேன் மில் தெரு, சென்னை-1.